## வினாத்தாள் திட்ட வரைவு

பத்தாம் வகுப்பு  தமிழ் I தாள்

| செய்யுள் பகுதி | | | | |
|---|---|---|---|---|
| இயல் | பு.வி | கு.வி | சி.வி | நெ.வி |
| 1 | 1 | 2 | - | 1 |
| 2 | 1 | - | 1 | |
| 3 | 1 | 1 | 1 | |
| 4 | 1 | - | 1 | |
| 5 | 1 | 1 | - | |
| 6 | 1 | 1 | | 1 |
| 7 | 1 | 1 | | |
| 8 | 1 | - | 1 | |
| 9 | 1 | 1 | | |
| 10 | 1 | - | 1 | |
| உரைநடை | | | | |
| 1 | 1 | 1 | - | 1 |
| 2 | 1 | - | 1 | |
| 3 | 1 | - | 1 | |
| 4 | 1 | - | 1 | |
| 5 | 1 | 1 | - | |
| 6 | 1 | 1 | 1 | 1 |
| 7 | 1 | 1 | - | |
| 8 | 1 | 1 | 1 | |
| 9 | 1 | 1 | - | |
| 10 | 1 | 1 | - | |

| | |
|---|---|
| குறிப்பு: 1. நெடுவினா செய்யுள் உரைநடை | முதல் 5 இயல்களில் 1 வினா அடுத்த ஐந்து இயல்களில் 1 வினா |
| 2. இயல் 4,6,9,10 | பாடல் கொடுத்து வினா கேட்கப்படும் |
| 3. 1-10 இயல்களில் (உரைநடைப்புகுதி) | பத்தி தந்து வினா கேட்கப்படும் |

சுருக்கம்:

| வினா வகை | பு.வி. | கு.வி. | சி.வி. | நெ.வி. | மனப்பாடப் பகுதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| செய்யுள் | 10 | 10 | 17 | 8 | 10 | 55 |
| உரைநடை | 10 | 10 | 17 | 8 | - | 45 |
| மொத்தம் | 20 | 20 | 34 | 16 | 10 | 100 |

## வினாத்தாள் திட்ட வரைவு

பத்தாம் வகுப்பு

தமிழ் II தாள்

| வினா வகை | பு.வி. | கு.வி. | சி.வி. | நெ.வி. |
|---|---|---|---|---|
| பாடப்பகுதி/மதிப்பபெண் | 1 | 2 | 5 | 10 |
| இலக்கணம் | 10 | 5+2 | 2+1 | |
| துணைப்பாடம் | | | 2+1 | |
| கட்டுரை | | | | 1+1 |
| கடிதம் | | | | 1+1 |
| மொழிப்பயிற்சி | 10 | | 2 | |
| பாநயம் பாராட்டல் | | | 1 | |
| படிவம் நிரப்புதல் | | | 1 | |
| படைப்பாற்றல் | | | 1+1 | |
| வாழ்வியல் திறன் / மதிப்புக்கல்வி | | | 1 | |
| | 20 | 5+2 | 10+2 | 2+2 |

| பாடப்பகுதி/ | மதிப்பபெண |
|---|---|
| இலக்கணம் | 30 |
| துணைப்பாடம் | 10 |
| கட்டுரை | 10 |
| கடிதம் | 10 |
| மொழிப்பயிற்சி | 20 |
| பாநயம் பாராட்டல் | 5 |
| படிவம் நிரப்புதல் | 5 |
| படைப்பாற்றல் | 5 |
| வாழ்வியல் திறன் / மதிப்புக்கல்வி | 5 |
| மொத்தம் | 100 |

# தமிழ் முதல் தாள்

## செய்யுள்

**01. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. திருக்குறளைப்போற்றிப் பாடும்நூல்__________
   1) நால்வர் நான்மணிமாலை 2) திருவள்ளுவமாலை 3) இரட்டைமணிமாலை
   **விடை : திருவள்ளுவமாலை**
2. திருக்குறள்______________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.
   1)சிந்தியல் 2)குறள் 3)நேரிசை **விடை : குறள்**
3. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப்பாடியவர்_____________
   1)பாரதியார் 2)சுரதா 3)பாரதிதாசன் **விடை : பாரதிதாசன்**
4. சைவ சமயக் குரவர்_____________________ பேர்.
   1)இரண்டு 2)மூன்று 3)நான்கு **விடை : நான்கு**
5. சைவத் திருமுறைகள்________________
   1)பத்து 2)பதினொன்று 3)பன்னிரண்டு **விடை : பன்னிரண்டு**
6. ஏலாதி_-________________நூல்களுள் ஒன்று.
   1)பதினெண் மேற்கணக்கு 2)பதினெண் கீழ்க்கணக்கு 3)காப்பியம்
   **விடை : பதினெண் கீழ்க்கணக்கு**
7. கணிமேதாவியாரின் காலம்________
   1)கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு (கடைச்சங்ககாலம்) 2).சங்கமருவியகாலம் 3)இடைக்காலம்
   **விடை : கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு (கடைச்சங்ககாலம்)**
8. மருந்துப் பொருள்களால் அமையப்பெற்ற இருநூல்கள்______________
   1)திருக்குறள், நன்னூல் 2). திரிகடுகம்,ஏலாதி. 3)நற்றிணை, அகநானூறு
   **விடை : திரிகடுகம்,ஏலாதி**
9. இளங்கோவடிகள்________________ நாட்டைச் சேர்ந்தவர்.
   1').சோழ 2).சேர 3).பாண்டிய **விடை: சேர**
10. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்______________
    1)கவிமணி 2)பாரதிதாசன் 3) பாரதியார் **விடை:. பாரதியார்**
11. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பது___________________
    1)சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3)சூளாமணி **விடை: சிலப்பதிகாரம்**
12. குடும்ப விளக்கு___________________படைத்த குறுங்காவியங்களில் ஒன்று.
    1) பாரதியார் 2) பாரதிதாசன் 3) சுரதா **விடை: பாரதிதாசன்**
13. பாரதிதாசனார் ___________________ என அழைக்கப்படுகிறார்
    1)புரட்சிக்கவிஞர் 2)தேசியக்கவிஞர் 3)உவமைக் கவிஞர் **விடை: புரட்சிக்கவிஞர்**
14. ஆறு காண்டங்களைக் கொண்டநூல்_______________
    1) சிலப்பதிகாரம் 2)கம்பராமாயணம் 3)சீறாப்புராணம் **விடை: கம்பராமாயணம்**
15. சரசுவதி அந்தாதி_____________ இயற்றிய நூல்களில் ஒன்று.
    1)கம்பர் 2)ஒட்டக்கூத்தர் 3)புகழேந்தி **விடை: கம்பர்**

16. கம்பரைப் புரந்தவர்__________
1)ஔவையார் 2) புகழேந்தி 3) சடையப்ப வள்ளல் **விடை: சடையப்ப வள்ளல்**
17. தமிழுக்குக் கதி எனப்படுவது____________
1) மணிமேகலை, சிலப்பதிகாரம் 2) கம்பராமாயணம், திருக்குறள் 3)நாலடியார், நான்மணிக்கடிகை **விடை: கம்பராமாயணம், திருக்குறள்**
18.நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்__________
1)அகநானூறு 2)கலித்தொகை 3)நற்றிணை **விடை: நற்றிணை.**
19. நற்றிணையைத் தொகுப்பித்தவர்________________
1)பன்னாடுதந்த மாறன்வழுதி 2)இளம்பெரு வழுதி 3)உக்கிரப் பெருவழுதி.
**விடை: பன்னாடுதந்த மாறன்வழுதி**
20. நற்றிணை__________ நூல்களைச் சார்ந்தது.
1) பத்துப்பாட்டு 2) எட்டுத்தொகை 3). பதினெண் கீழ்க்கணக்கு. **விடை: எட்டுத்தொகை**
21. சேக்கிழார் பெருமான் அருளியது___________
1) சிவபெருமான் 2)பெரியபுராணம் 3)தலப்புராணம் **விடை: பெரியபுராணம்**
22. தம் வீட்டிலுள்ள அனைத்துப்பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப்பெயர் வைத்தவர்________
1)அப்பூதியடிகளார் 2) மாறநாயனார் 3)திருநீலகண்டர். **விடை: அப்பூதியடிகளார்**
23. பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப்பாடியவர்_________
1)பெ. சுந்தரனார் 2) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் 3) கவிஞர் பெ. இராமலிங்கனார்
**விடை: மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**
24. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்______________
1)அன்புள்ள பெற்றோர் 2) ஆர்வமுள்ள நண்பர் 3) மூத்த அறிவுடையார்
**விடை: மூத்த அறிவுடையார்**
25. அரியவற்றுள் எல்லாம் அரிது______________பேணித் தமராக்கொளல்
1)சிறியவர் 2) பெரியார் 3).உறவினர் **விடை: பெரியார்**
26. முதலிலார்க்கு ___________இல்லை.
1) ஊதியம் 2) நட்பு 3)பகை **விடை: ஊதியம்**
27. திருநாவுக்கரசர் காலம்____________ ஆம் நூற்றாண்டு.
1) கி.பி.12. 2) கி.பி.7. 3) கி.பி.9. **விடை: கி.பி.7.**
28. "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் பாடல்__________ 'அச்சமில்லை அச்சமில்லை' எனப் பாடத் தூண்டியது.
1) பாரதிதாசனை 2)சுரதாவை 3) பாரதியாரை **விடை: பாரதியாரை**
29. சீறாப்புராணம் ______________ காண்டங்களையுடையது.
1) மூன்று 2) ஐந்து 3) ஏழு **விடை : மூன்று**
30. 'கேழல்' என்பதன் பொருள் ______________
1) எருமை 2) புலி 3) பன்றி **விடை : பன்றி**
31. கலித்தொகை ______________ நூல்களில் ஒன்று.
1) பத்துப்பாட்டு 2) எட்டுத்தொகை 3) பதினெண்கீழ்க்கணக்கு **விடை : எட்டுத்தொகை**

32. நெய்தல் கலியைப் பாடியவர் ________________.
1) ஓரம்போகியார் 2) கபிலர் 3) நல்லந்துவனார் **விடை : நல்லந்துவனார்**
33. போற்றாரைப் பொறுத்தல் என்பது ________________ எனப்படும்.
1) பொறை 2) முறை 3) நிறை **விடை : பொறை**
34. நந்திக் கலம்பகம் ________________ வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.
1) 96 2) 18 3) 10 **விடை : 96**
35. பணை என்னும் சொல்லின் பொருள் ________________
1) அரசு 2) ஆல் 3) மூங்கில் **விடை : மூங்கில்**
36. பெருமாள் திருமொழியில் ________________ பாசுரங்கள் உள்ளன.
1) இருநூற்றைந்து 2) நூற்றைந்து 3) நூறு **விடை : நூற்றைந்து**
37. குலசேகராழ்வார் பாடல் ________________ தொகுப்பில் உள்ளது.
1) திருவியற்பா 2) முதலாயிரம் 3)பெரியதிருமொழி **விடை : முதலாயிரம்**

## உரைநடை

**02.உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:**

1. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்_____-
1)திரு.வி.க 2)உ.வே.சா 3)பாவாணர் விடை:**பாவாணர்**
2) இன்றைய மதுரையில்______தமிழ்ச்சங்கம் இருந்தது.
1)மூன்றாம் 2)இரண்டாம் 3)முதலாம் விடை:**மூன்றாம்**
3) அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர்
1)திரு.வி.க 2)பெரியார் 3)பாரதிதாசன் விடை:**பெரியார்**
4) பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று__________இல்லாமை.
1)வாக்குரிமை 2)பேச்சுரிமை 3)சொத்துரிமை விடை:**சொத்துரிமை**
5. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் _________ பேராசிரியராகப் பணியாற்றினார்
1. வணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல் விடை : **பொருளியல்**
6. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது _________ .
1. பத்மஸ்ரீ 2. பாரதரத்னா 3. பத்மவிபூசன் விடை: **பாரதரத்னா**
7. நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமைந்த அரியகலை _____________
1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை விடை : **பேச்சுக்கலை**
8. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் _______
1. பேரறிஞர் அண்ணா 2. மு.வரதராசனார் 3. கா.அப்பாத்துரையார்.
விடை: **பேரறிஞர் அண்ணா**
9. பண்ணொடு தமிழொப்பாய் எனத்தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்
1. திருவாசகம் 2. திருக்குறள் 3. தேவாரம் விடை : **தேவாரம்**
10. உலகம் என்ற தமிழ்ச்சொல் _______ என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
1. உலகு 2. உலவு 3. உளது விடை : **உலவு**
11. தமிழர்கள் நிலத்தை ______ வகையாகப் பிரித்துக்காட்டியிருக்கிறார்கள்
1. மூன்று 2. ஆறு 3. ஐந்து விடை : **ஐந்து**

12. காந்தியடிகள்____________நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்

1. சிரவண பிதுர்பத்தி 2. அரிச்சந்திரன் 3. பக்தபிரகலாதன்

விடை: **அரிச்சந்திரன்**

13. பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய நூல் ________

1. பகவத்கீதை 2. நன்னூல் 3. பைபிள் விடை : **பைபிள்**

14. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை ________

1. ஆடம்பரம், வீண்செலவு 2. எளிமை, சிக்கனம் 3. அன்பு, அருள்

விடை : **எளிமை, சிக்கனம்**

15. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ____________

1. கந்தபுராணம் 2. சீறாப்புராணம் 3. பெரியபுராணம் விடை : **பெரியபுராணம்**

16. வள்ளலாரின் இயற்பெயர் ________

1. சம்பந்தர் 2. இராமலிங்கர் 3. தாயுமானவர் விடை : **இராமலிங்கர்**

17. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ________

1. பத்தாம் வகுப்பு 2. பன்னிரெண்டாம் வகுப்பு 3. எட்டாம் வகுப்பு

விடை : **பன்னிரெண்டாம் வகுப்பு**

18. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் __________

1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. தாராபாரதி விடை : **தாராபாரதி**

## செய்யுள்

**03.கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மாணிக்க வாசகர் பிறந்த ஊர்____________ **(திருவாதவூர்)**
2. மாணிக்கவாசகர் பாடல்கள்____________திருமுறையில் இடம்பெற்றுள்ளன. **(எட்டாம்)**
3. மாணிக்க வாசகர் கட்டிய கோயில் ____________உள்ளது. **(திருப்பெருந்துறையில்)**
4. மாணிக்க வாசகர் ____________மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர் **(அரிமர்த்தன பாண்டியன்)**
5. ஜி.யு. போப் திருவாசகத்தை____________மொழியில் மொழிபெயர்த்தார். **(ஆங்கில)**
6. திருவாசகத்திற்கு உருகார்____________உருகார். **(ஒரு வாசகத்திற்கும்)**
7. அழுது அடியடைந்த அன்பர் எனப்படுபவர்____________ **(மாணிக்கவாசகர்)**
8. திருக்குறளில்_______ அதிகாரங்களும் _______ குறட்பாக்களும் உள்ளன.**(133, 1330)**
9. திருக்குறள் ____________ முதலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. **(ஆங்கிலம்,கிரேக்கம், இலத்தீன்)**
10. ஒழுக்கத்தின் எய்துவர் ____________இழுக்கத்தின் எய்துவர்____________பழி. **(மேன்மை, எய்தாப்)**
11. திருக்குறள் ____________நூல்களுள் ஒன்று **(பதினெண் கீழ்க்கணக்கு)**
12. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும், ____________ஆகும். **(மணிமேகலையும்)**

13. சிலப்பதிகாரம், மணிமேகலை____________வளையாபதி, ____________என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். **(சீவகசிந்தாமணி, குண்டலகேசி)**
14. தேரா மன்னன்____________ **(பாண்டியன்)**
15. புள்ளுறு புன்கண் தீர்த்தோன்____________. **(சிபிச்சக்கரவர்த்தி)**
16. அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்____________ **(மனுநீதிச்சோழன்)**
17. சிலப்பதிகாரத்தின் காண்டம்__________ ,காதை_____ **(3,30)**
18. கம்பர் பிறந்த ஊர் ____________ **(தேரழுந்தூர்)**
19. கம்பரை ஆதரித்த வள்ளல் ____________ **(சடையப்பவள்ளல்)**
20. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு ____________எனப்பெயரிட்டார். **(இராமவதாரம்)**
21. நன்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ____________பேரெல்லையும் கொண்ட நூல். **(பன்னிரண்டு அடிப்)**
22. அரி என்னும் சொல்லின் பொருள்________________ **(நெற்கதிர்)**
23. சேக்கிழாரின் இயற்பெயர்________________ **(அருண்மொழித்தேவர்)**
24. உத்தம சோழப் பல்லவர் என்றழைக்கப்படுபவர் ____________ **(சேக்கிழார்)**
25. தனியடியார்____________ தொகையடியார் ____________ ஆவர். **(63 பேர், 9 பேர்)**
26. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் ____________ **(பிள்ளைப் பாண்டியன்)**
27. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ____________ **(ஒட்டக்கூத்தன்)**
28. போலிப் புலவர்களின் காதில் துறடு மாட்டி அறுப்பவர்____________ **(வில்லிபுத்தூரார்)**
29. இல்லாரை ____________ எள்ளுவர் **(எல்லாரும்)**
30. அறனீனும் இன்பமும் ஈனும் ____________தீதின்றி வந்தபொருள் **(திறனறிந்து)**
31. திருநாவுக்கரசரின் தமக்கையார் ____________ஆவார் **(திலகவதியார்)**
32. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள்____________என அழைக்கப்படுகிறது. **(தேவாரம்)**
33. திருநாவுக்கரசரின் இயற்பெயர்____________ **(மருணீக்கியார்)**
34. சீறாப்புராணத்தை இயற்றியர் ____________ **(உமறுப் புலவர்)**
35. உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல்____________ **(சீதக்காதி)**
36. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ____________ போன்றிருந்தேனே. **(குடி)**
37. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில்_____ குலசேகரர் பாடியதாகும். **(பெருமாள் திருமொழி)**

## உரைநடை

**04. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தமிழர் மனித வாழ்வை_____,_________எனப்பிரித்தனர்
விடை:**அகம்,புறம்**
2. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி________விடை:**தமிழ்**
3. 2004ஆம் ஆண்டு ________திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது. விடை:**அக்டோபர்**
4. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர்________ஆவார்
விடை: **மாக்சுமுல்லர்.**
5. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ஒன்று உண்டு. விடை: **பெருநோய்**

6. பெரியார் சமூக ________ எதிர்த்தவர். மூடக் கருத்துக்களை ________
விடை:**முரண்களை, முட்டறுத்தவர்**
7. வெறும் பேச்சுக்கும் ________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. விடை:**மேடைப்**
8. பேச்சு முடிவில் ________ கூறிக் கருத்தை நிலைநாட்டி முடிக்க வேண்டும்.
விடை:**சுருக்கத்தைக்**
9. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் ________ என அழைப்பர்
விடை:**இயக்குநர்**
10. படப்பிடிப்புக் கருவியை ________ பொருத்துவதும் உண்டு. விடை:**நகர்த்தும் வண்டியில்.**
11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ________ இருக்கும். விடை: **வேடிக்கையாக**
12. இலெமூரியாவை ________ என்பர். விடை:**மனித நாகரிகத்தொட்டில்**
13. தனக்குவமையில்லா ஒரு ________ தமிழ்இனம். விடை:**தனிஇனம்**
14. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவர் ________
விடை:**அரிச்சந்திரன்.**
15. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் ________ விடை:**தால்சுதாய்**
16. இராமலிங்கர் சத்திய தருமசாலையை நிறுவிய இடம் ________ விடை:**வடலூர்**
17. இராமலிங்கர்,தமிழ்மொழியே ________ தரும் என்று கருதினார் விடை:**இறவாத நிலை**
18. சங்க காலத்தில் பெண்கள் ________ கடந்து செல்லக்கூடாது. விடை:**கடல்**
19. நாள்தோறும்கல்வியில் ________ உண்டாகிக் கொண்டிருக்கின்றன.
விடை:**புதுப்புதுத்துறைகள்**
20. காவலர்,இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் ________ தேர்வும் உண்டு.
விடை:**எழுத்து**

**05. பொருத்துக. (செய்யுள்)**

01)

| **சொல்** | - | **பொருள்** |
|---|---|---|
| 1. விரை | - | அ. உடல் |
| 2 கழல் | - | ஆ. பெருகி |
| 3. ததும்பி | - | இ. மணம் |
| 4. மெய் | - | ஈ. அணிகலன் |

விடை:1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ,

02

| **பிரிவு** | | **அதிகாரங்கள்** |
|---|---|---|
| 1. அறத்துப்பால் | - அ. | 25 அதிகாரங்கள் |
| 2. பொருட்பால் | - ஆ. | 38 அதிகாரங்கள் |
| 3. இன்பத்துப்பால் | - இ. | 70 அதிகாரங்கள் |
| | - ஈ | 50 அதிகாரங்கள் |

விடை:1-ஆ, 2-இ, 3-அ,

03 **காண்டம்** **காதைகள்**

1. புகார்க் காண்டம் - அ. 13 காதைகள்
2. மதுரைக் காண்டம் - ஆ. 7 காதைகள்
3. வஞ்சிக் காண்டம் - இ. 10 காதைகள்
- ஈ. 15 காதைகள் விடை:1-இ, 2-அ, 3-ஆ,

04. **சொல்** **பொருள்**

1. இடர் - அ. நிலவு
2. நாவாய் - ஆ. துன்பம்
3. இறை - இ. படகு
4. இந்து - ஈ. தலைவன் விடை:1-ஆ, 2-இ, 3-ஈ, 4.அ,

05 **சொல்** **பொருள்**

1. செறு - அ.பனையோலைப்பெட்டி
2. வித்து - ஆ.புதுவருவாய்
3. யாணர் - இ. விதை
4. வட்டி - ஈ. வயல் விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,

06 **சொல்** **பொருள்**

1. மேதி - அ. சிவன்
2. சந்தம் - ஆ. எருமை
3. கோதில் - இ. அழகு
4. அங்கணர் - ஈ. குற்றமில்லாத
- உ. பசு விடை:1-ஆ, 2-இ, 3-ஈ, 4.அ,

07 **சொல்** **பொருள்**

1. கான் - அ. கரடி
2. உழுவை - ஆ. சிங்கம்
3. மடங்கல் - இ. புலி
4. எண்கு - ஈ. காடு விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,

08 **சொல்** **பொருள்**

1. பண்பு - அ. கூறியது மறா அமை
2. அன்பு - ஆ. பேதையார் சொல் நோன்றல்
3. அறிவு - இ. தன்கிளை செறா அமை
4. செறிவு - ஈ. பாடறிந்து ஒழுகல் விடை:1-ஈ, 2-இ, 3-ஆ, 4.அ,

**06. பொருத்துக (உரைநடை**

01 1. ஈஸ்ட்மன் _ அ. ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
2. எடிசன் _ ஆ. படச்சுருள்
3. எட்வர்டு மைபிரிட்சு _ இ. கருத்துப்படம்
4. வால்ட் டிஸ்னி _ ஈ. இயக்கப்படம்
விடை: 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ,

02 1. சத்யசோதனை _ அ. திருவள்ளுவர்
2. பகவத்கீதை _ ஆ. கிறிஸ்துவ சமய நூல்
3. திருக்குறள் _ இ. காந்தியடிகள்
4. பைபிள் _ ஈ. இந்து சமய நூல்
விடை: 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ.

03 1. வினையே ஆடவர்க்குயிர் _ அ. நாமக்கல் கவிஞர்
2. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை _ ஆ. குறுந்தொகை
3. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே _ இ. தொல்காப்பியர்
4. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் _ ஈ. திருமூலர்
விடை: 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ.

**07. விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக.**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
   ❄ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் யார்?
2. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
   ❄ பெரியார் எதை ஏற்க மறுத்தார்?
3. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
   ❄ எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
   ❄திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?
5. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள்
   ❄ தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்?
6. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்
   ❄ பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் என காந்தியடிகள் எதைக் கருதினார்?
7. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.
   ❄ கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?

8. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
   ❋ பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரத் தகுதி என்ன?
9. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன
   ❋ எத்துறையில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?

# செய்யுள்

**8. குறு வினாக்கள் :**

**1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**
1. ஒழுக்கம். 2. எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.

**2. நன்றிக்கு வித்தாவது எது?**
நல்லொழுக்கம்

**3. என்றும் இடும்பை தருவது எது?**
தீய ஒழுக்கம்.

**4. பல கற்றும் கல்லார் அறிவிலார்,யார்?**
1.சான்றோரின் அறிவுரைகளைப் பின்பற்றாதவர்.

**5. கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?**
1. கோட்டானைக் காக்கை பகலில் வெல்லும்
2. அரசர் காலம் அறிந்து செயல்படவேண்டும்.

**6. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர்?**
காலம் அறிந்து இடத்தோடு பொருந்தி செயலை செய்தல் வேண்டும்.

**7. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
ஆட்டுக்கடா பகையைத் தாக்கப் பின் வாங்குவதைப் போன்றதாகும்.

**8. கொக்கைச் சான்றாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?**
1.செயலை மேற்கொள்ளாத காலத்தில் கொக்கினைப் போல அடங்கியிருத்தல் வேண்டும்.
2.செயல் வாய்க்குமிடத்துக் கொக்கினைப் போல் விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

**10. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?**
முதற்பாவலர், பொய்யில் புலவர், தெய்வப்புலவர், தேவர்.

**11. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**
வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே.

**12. ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**
1. ஒழுக்கத்தால் எய்துவது உயர்வு.
2. இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி.

**13. செய்தற்கரிய செயல் செய்வது எப்போது?**
வாய்ப்பு கிடைக்கும் போது செயல்களை செய்து முடித்திட வேண்டும்.

**14. ஏலாதி-நூற் குறிப்பு எழுதுக.**

1.ஏலம்+ஆதி-ஏலாதி.ஏலக்காய், இலவங்கம், சுக்கு, சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருள்களால் செய்யப்பட்ட மருந்து உடலின் நோயைப் போக்கும்.

2.அதுபோல,இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் உள்ள ஆறு கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கும்.

**15. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?**

1.பிறரிடம் பணிவுடையவனாய் இருத்தல்,

2.ஒழுக்கநெறியில் நடத்தல்,

3.சான்றோர் அறிவுரையைப் பின்பற்றுதல்.

4.நுட்பமான நூல்களை ஆராய்தல்,

5.அவை கூறும் நெறியில் வாழ்தல்.

**16. கம்பர் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| ஊர் | : தேரழுந்தூர் |
| ஆதரித்தவர் | : சடையப்ப வள்ளல் |
| காலம் | : கி.பி.12-ம் நூற்றாண்டு |
| நூல்கள் | : கம்பராமாயணம், சரசுவதி அந்தாதி |

**17. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை?யாருக்குக் கொண்டு சென்றான்?**

1.தேனும், மீனும்  2.இராமனுக்குக் கொண்டு சென்றான்.

**18. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?**

தலை மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான்.

**19. குகனின் வேண்டுகோள் யாது?**

1. உன்னைப் பிரிந்து எனது இருப்பிடம் செல்லமாட்டேன்.
2. என்னாலான அடிமைத் தொழிலை உனக்குச் செய்வேன்

**20. அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் , யாரிடம் கூறியது ?**

இராமன் , குகனிடத்தில் கூறியது.

**21. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?**

தண்ணீர்ப் பந்தலில் நும் பெயரை எழுதாமல் வேறொரு பெயரை எழுதக் காரணம் என்ன? என வினவினார்.

**22. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?**

1. அப்பூதியடிகள் களவு , பொய் , காமம் , சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்.
2. வளமான இல்லற வாழ்வினர்.

**23. அப்பூதியடிகள் எவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர்வைத்தார் ?**

1. அளவுக்கருவிகள் 2. நிறைகோல் 3. மக்கள் 4. பசுக்கள் 5. எருமைகள்.

**24. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?**

1. தம் தலைமேல் கைகுவித்து வணங்கினார்.

2. தரையில் வீழ்ந்து திருநாவுக்கரசரின் பாதங்களை வணங்கினார்.

**25. நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல் ? யார் யாரிடம் கூறியது ?**

திருநாவுக்கரசர் , அப்பூதியடிகளிடம் கூறியது.

**26 .“இப்போது இங்கு அவன் உதவான்” யார் , யாரிடம் கூறியது ?**

அப்பூதியடிகள் , திருநாவுக்கரசரிடம் கூறியது

**27. மூத்த திருநாவுக்கரசருக்கு நேர்ந்தது என்ன ?**

மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்து அரியும்போது பாம்பு தீண்டியது.

**28. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?**

‘ஒன்றுகொலாம்’ எனத்தொடங்கும் பதிகம் பாடி உயிர்த்தெழச் செய்தார்.

**29. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?**

வெண்பா , ஆசிரியப்பா , கலிப்பா , வஞ்சிப்பா.

**30. வயல் தரும் விளைவுகள் யாவை ?**

அறம் , பொருள் , இன்பம் , வீடு

**31. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யார் ?**

1. பிள்ளைப் பாண்டியன் 2. வில்லிபுத்தூர் ஆழ்வார். 3. ஒட்டக் கூத்தர்

**32. வன்னையுள் எல்லாம் தலையாயது எது ?**

தம்மைவிட அறிவில் சிறந்த பெரியோரை உறவினாராய் ஏற்று நடத்தல்.

**33. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?**

அறிவுரைகூறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாத அரசன், கெடுப்பார் இலானுங் கெடுவான்.

**34. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?**

பொருள்.

**35. நல்லார் தொடர்பு கைவிடுதல் - எத்தன்மைத்து ?**

பலரோடு பகை கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை தரும்.

**36. வேந்தற்குரிய பொருள்கள் யாவை ?**

1. அரசு உரிமைப் பொருள்
2. மக்களின் வரிப் பொருள்
3. பகைவர் செலுத்தும் திறைப் பொருள்.

**37. தேவாரம் - பொருள் எழுதுக.**

1. தே + வாரம் - தெய்வத்தைப் பற்றிய இன்னிசைப் பாடல்கள்.
2. தே + ஆரம் - தெய்வத்திற்கு அணியும் பூமாலை போன்ற பாமாலை.

**38. சிவபெருமான் எத்தன்மையன் ?**

1. எவருக்கும் அடிமையாகாத தன்மையன்.
2. காதினில் சங்கினை குண்டலமாக அணிந்தவன்.

**39. ஆற்றுதல் என்பது யாது ?**
வருந்தி வந்தோர்க்கு உதவுதல் .

**40. பண்பு எனப்படுவது யாது ?**
சான்றோர்வழி அறிந்து நடத்தல்.

**41. அறிவு எனப்படுவது யாது?.**
அறிவிலார் சொல் பொறுத்தல்.

**42. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது?**
நந்திக்கலம்பகம்.

**43. நந்திக்கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக.**
அம்மானை, ஊசல், மறம், தவம்.

**44. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது?**
மூன்றாம் நந்தி வர்மன்.

**45. நந்திவர்மன் வீரம் எத்தகையது?.**
அறிவு இல்லாத அரசர் நந்திவர்மனின் திருவடிகளை வணங்காவிடில், கொல்லப்பட்டு, தேவர் உலகம் அடைவர்.

**46. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?.**
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

**47. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?**
வடமொழி (சமற்கிருதம்)
தென்மொழி (தமிழ்)

## உரைநடை

**9. குறுவினாக்கள்:-**

**1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?**
மூவாயிரம்.

**2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?**
மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

**3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.**
*. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
*. தமிழர் அகம்,புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.

**4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?**
தொன்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை.

**5. ஒரு மொழி நிலைப்பெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?**

1. பேச்சு மொழியாக 2. எழுத்து மொழியாக 3. ஆட்சி மொழியாக 4. நீதிமன்ற மொழியாக 5. பயிற்று மொழியாக.

**6. மொழி மாற்றம் என்றால் என்ன?**

ஒரு மொழிப் படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயர்.

**7. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?**

*. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை

*. பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

**8. திரைப்படச்சுருள் பற்றி நீவீர் அறிவன யாவை?**

செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

**9. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?**

* குமரி மலை * குமரி ஆறு * ப∴றுளி ஆறு

**10. ஏற்றுமதி , இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?**

* பட்டினப் பாலை

* மதுரைக்காஞ்சி

**11. ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக.**

* 'ஞால்' - தொங்குதல்

* ஞாலம் - உலகம்

* அண்டவெளியில் தொங்கிக்கொண்டிருகிறது.

**12. கண்ணிடத்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?**

* கண்ணப்பன் * ஊனுக்கு ஊன்

**13. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது?**

காந்தியக் கொள்கைகள் இன்றும் உலகை வழிநடத்திச் செல்கின்றன.

**14. காந்தியடிகளை கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?**

*தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றும் இல்லை.

*தீமை செய்தவற்கும் நன்மையே செய்.

*உண்மைப் பொருண்மை உண்டு.

**15. இயேசுவின் மலைப் பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்தது என்ன?**

*தீயவனை எதிர்க்காதே *.அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில்

*பகைவனிடமும் அன்பு பாராட்டு

**16. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?**

*. அன்பு *. உண்மை *. உறுதி *. இன்னாச் செய்யாமை

**17. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**
*. கதர் இயக்கம் *. மது விலக்கு *. தீண்டாமை ஒழிப்பு

**18. எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?**
1. எளிமை 2. சிக்கனம் 3. உண்மை பேசுதல்
4. பகைவனிடம் அன்பு பாராட்டுதல்

**19. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?**
பகட்டாக வாழ்வது பாவம்.

**20. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?**
*. கிராமங்களின் வாழ்வே இந்தியாவின் வாழ்வு.
*. அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில்தான் உள்ளது.

**21. இராமலிங்கர் எங்கு? எப்போது பிறந்தார்?**
1. கடலூர் மாவட்டம் மருதூர்.
2. பிறந்த தேதி 5.10.1823

**22. இராமலிங்கர் புதுநெறிக் கண்ட புலவர் எனப் போற்றப்படக் காரணம் என்ன?**
மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளி பெற சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.

**23. வள்ளலாரின் முழக்கம் யாது?**
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை.

**24. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**
சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.

**25. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகள் இரண்டனைக் கூறுக?**
1. தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.
2. குருவை வணங்கக் கூசி நிற்காதே.

**26. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?**
மேல்நிலைக் கல்வித் தகுதி (12 ஆம் வகுப்பு)

**27. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?**
*. உயிரி தொழில்நுட்பம்
*. நுண்ணியல் தொழில்நுட்பம்

**28. பட்டப் படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.**
1. பி.லிட் – தமிழ்
2. பி.ஏ. – ஆங்கிலம்
3. பி.எஸ்.சி. – கணிதம்
4. பி.காம். – வணிகவியல்

**29. இடைநிலை ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.**
மேனிலைக் கல்வித் தேர்ச்சி.
இரண்டாண்டுகள் பயிற்சி.

# 10. செய்யுள் பகுதி - சிறு வினாக்கள்

**1 வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?**

- ‘கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்க!
- பொதியமலைக்குத்தலைவனே வாழ்க! செழியனே வாழ்க!
- தென்பகுதித் தலைவனே வாழ்க!
- பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க!’

**2 கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக?**

- கொற்றவையும் அல்லள்.
- பிடாரியும் அல்லள்.
- பத்ரகாளியும் அல்லள்.
- காளியும் அல்லள்.
- துர்க்கையும் அல்லள்.
- சிலம்பைக் கையில் ஏந்தி பெண் ஒருத்தி நம் வாயிலின் முன்னே நிற்கிறாள்.

**3 சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?**

- **சிபி மன்னன்**
  புறாவின் துன்பத்தைப் போக்க, தன் தசையை அறுத்துக் கொடுத்தவன்.
- **மனுநீதிச்சோழன்**
  பசுவின் துயரைப் போக்க தன் மகனைக் கொன்றவன்.

**4 கண்ணகிக்குப் பாண்டியன் நெஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**

- கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று.
- அதுவே அரச நீதி.

**5 தமிழ் மொழி வளர்ச்சியடைய பாரதிதாசன் கூறும் வழி வகைகள் யாவை? (அல்லது) 6. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**

- எளிய நடையில் எழுதுதல் வேண்டும்.
- இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல் வேண்டும்.
- தமிழ்மொழியை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும்.
- ஊர்தோறும் இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.

**7 கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.**

1. ஆசிரியர் - கம்பர்.
2. காண்டங்கள் - ஆறு
3. கம்பர் இட்ட பெயர் - இராமாவதாரம
4. சிறப்பு - தமிழுக்குக் கதி

**8 சீதை, இலக்குவன், ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**

- ‘குகன் நம்மிடம் நீங்காத அன்பு உடையவன்.
- இவன் நம்முடன் இருக்கட்டும்’

**9 விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**

❖ குகன் கொண்டு வந்த தேனும் மீனும் கிடைப்பதற்கு அரியன.
❖ அமுதத்தைவிடச் சிறந்தன.
❖ இவை தூய்மையானவை.
❖ நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்'

**10 சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**

1. பொன், பவளம், முத்து, மாணிக்கம் ஆகியவை அணிகலனாக ஒன்று சேரும்.
2. சான்றோர், சான்றோருடன் சேர்வர்.
3. தீயவர், தீயவர் பக்கமே சேர்வர்.

**11 தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.**

1. அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும்,
2. யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் செல்லுதலும் செல்வச் சிறப்பன்று.
3. எளியோரைக் காப்பதே சிறந்த செல்வம்
4. தலைவியைக் காப்பாயாக.

**12 சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.**

❖ சீறா - வாழ்க்கை.
❖ புராணம் - வரலாறு. நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது.
❖ ஆசிரியர் - உமறுப்புலவர்
❖ காண்டங்கள் - மூன்று
❖ பாடல்கள் - 5027

**13 புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?**

❖ விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.
❖ யானைகளின் மார்பினைக் கீறிக் குருதியினைக் குடிக்கும்.
❖ மலைகளும் அதிரும்படி இடிபோன்ற ஓசை உடையது.
❖ காட்டெருமை, பன்றி, கரடி, கலைமான்கள் கால்கள் தடுமாறி நிலத்தில் விழும்.

**14 நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

❖ தனது வாலை வளைத்தது.
❖ உடல் நடுக்கமுற்றுது.
❖ மெல்ல மெல்ல நடந்து வந்தது.
❖ நபிகள் நாயகத்தின் பாதங்களை பணிந்து வணங்கியது.

**15 சாதனைப்பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார்?**

❖ பணியை முடித்து ஓய்வு பெறுக.
❖ தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனதில் வந்து குவியும்.
❖ செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.

- ❖ செடியின் வெற்றி பூவில் உள்ளது.
- ❖ நமது வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

## 11.உரைநடைப் பகுதி - சிறு வினாக்கள்

**1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**
- ❖ பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படாது.
- ❖ ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
- ❖ உலகப்படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கப்பட வேண்டும்

**2. பெண்ணுரிமையை விளக்குக?**
- ❖ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை.
- ❖ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமைகளாக இருக்கக் கூடாது.
- ❖ மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும்.
- ❖ பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும்.

**3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**
- ❖ தமிழர்களிடையே இன்று பரவியுள்ள ஒரு பெருநோய் மணக்கொடை.
- ❖ தன் மகனுக்காக செலவழித்தப் பணத்தை முதலீடாகக் கருதுகின்றனர்,
- ❖ வரப்போகும் மனைவியிடம் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர்.
- ❖ தமிழ்நாட்டு இளைஞர்கள் தாமே பாடுபட்டு முன்னேற வேண்டும்.

**4. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?**
- ❖ 1908 - எல்பின்ஸ்டன் பள்ளி - உயர்நிலைப் படிப்பு.
- ❖ 1912 - பம்பாய் எலபின்ஸ்டன் கல்லூரி - இளங்கலைப் பட்டம்.
- ❖ 1915 - கொலம்பியா பல்கலைக்கழகம் - முதுகலைப் பட்டம்.
- ❖ 1916 - லண்டன் - பாரிஸ்டர் பட்டம்.

**5. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**
- ❖ 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
- ❖ மும்பையில், சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தை உருவாக்கினார்.

**6. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**
- ❖ தன்வயப்படுத்துதல்
- ❖ சுருக்கமான முன்னுரை.
- ❖ இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடங்குதல்.

**7. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.**
- ❖ பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல்,
- ❖ பாராட்டி முடித்தல்,
- ❖ கவிதைக் கூறி முடித்தல்.
- ❖ உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல்.

**8. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

❖ கருத்துக்களே உயிர்நாடி.

❖ கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது.

❖ இனிமையாகவும், எளிமையாகவும் கருத்தை உணர்த்துதல் வேண்டும்.

**9. கடல் வாணிகம் குறித்து எழுதுக.**

❖ தமிழர்கள் கடல் வாணிகத்தில் தலைசிறந்திருந்தனர்.

❖ பொன்னும், முத்தும், துகிலும் கொண்டு கடல் வாணிகம் செய்தனர்.

❖ கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் அனுப்பப்பட்டன.

❖ அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருட்களுடம் அனுப்பப்பட்டன.

❖ சாவக நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

**10. உழவுத்தொழில் குறித்து எழுதுக.**

❖ உழவுத் தொழில் செய்பவரே உயர்ந்தவர்.

❖ உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

❖ உழவுக்குச் சிறப்புப் பெற்றது மருத நிலம்.

**11. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.**

❖ அரிச்சந்திரன் நாடகம்.

❖ உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரன்.

❖ அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள், தாம் ஒரு சத்தியவானாக இருக்கவேண்டும் என்று உறுதிகொண்டார்.

**12. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

❖ தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான்.

❖ நான் ஒரு தேசபக்தன்.

❖ காரணம், நான் மனிதாபிமானியாக இருப்பது.

**13. இன்னா செய்யாமை குறித்து காந்தியடிகள் கூறுவது யாது?**

❖ தென் ஆப்பிரிக்காவில் கறுப்புச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தினார்.

❖ சிறையில் அடைக்கப்பட்டார்.

❖ செருப்புத் தைத்தார்.

❖ ஆளுநருக்கு (ஸ்மட்ஸ்) அன்பளிப்பாக அளித்தார்.

## 12.செய்யுளைப் படித்து வினாக்களுக்கு விடையளி

1. அரிகால் மாறிய ........

❖ நூல் - நற்றிணை

❖ ஆசிரியர் - மிளைகிழான் நல்வேட்டனார்.

❖ பொருள் கூறுக.

அரி - நெற்கதிர்.

செறு - வயல்
யாணர் - புதுவருவாய்
வட்டி - பனையோலைப் பெட்டி

❖ பிரித்து எழுதுக.
அங்கண் - அம் + கண்
பற்பல - பல + பல
மென்கண் - மென்மை + கண்

❖ எதுகை
அரிகால் - மறுகால்
நெடிய - கடிய
புன்கண் - மென்கண்

❖ இலக்கணக் குறிப்பு
சென்ற வட்டி - பெயரெச்சம்.
ஊர - விளித்தொடர்.
புன்கண், மென்கண் - பண்புத்தொகை.

2. பொன்னும் துகிரும் .......

❖ நூல் : புறநானூறு
❖ ஆசிரியர் : கண்ணகனார்.
❖ பொருள்
துகிர் - பவளம்
சேய - தொலைவு
தொடை - மாலை
கலம் - அணி

❖ பிரித்து எழுதுக.
அருவிலை - அருமை + விலை
நன்கலம் - நன்மை + கலம்

❖ எதுகை
அருவிலை - ஒருவழி
பொன்னும் - மன்னிய
சாலார் - சாலார்

❖ இலக்கணக் குறிப்பு
பொன்னும் துகிரும் முத்தும் - எண்ணும்மை
மாமலை - உரிச்சொற்றொடர்
அருவிலை, நன்கலம் - பண்புத்தொகை

3. அரியா சனமுனக்கே .........
பாத்தனதாக் ........
குட்டிச் செவியறுத்துக் .....
தித்திக்கும் ..........

- ❖ நூல் : தமிழ்விடு தூது
- ❖ ஆசிரியர் : பெயர் அறியவில்லை
- ❖ பொருள்

அரியாசனம் - சிங்காதனம்
ஏர் - அழகு
நாளிகேரம் - தென்னை
சீத்தையர் - போலிப்புலவர்

- ❖ பிரித்து எழுதுக.

செவியறுத்து - செவி + அறுத்து
உன்னோடுவந்துரைக்கும் - உன்னோடு + உவந்து + உரைக்கும்
விண்ணப்பமுண்டு - விண்ணப்பம் + உண்டு
நாற்கரணம் - நான்கு + கரணம்.

- ❖ எதுகை

அரியாசனம் - சரியாரும்
திகழ்பா - புகழ்பா
நல்லேர் - சொல்லேர்
நாலே - மேலே
பாத்தனதா - கூத்தனிவன்
குட்டி - வெட்டி
வளர்ந்தனை - கிளர்ந்தனை
தித்திக்கும் - முத்தி
உண்ணப்படும் - விண்ணப்பம்

- ❖ இலக்கணக் குறிப்பு

செவியறுத்து - இரண்டாம் வேற்றுமைத் தெகை

4. ஆற்றுதல் என்பது ........
அறிவெனப்படுவது ....

- ❖ நூல் : கலித்தொகை
- ❖ ஆசிரியர் : நல்லந்துவனார்
- ❖ பொருள்

கிளை - சுற்றம்
நோன்றல் - பொறுத்தல்

- ❖ பிரித்து எழுதுக.

அன்பெனப்படுவது - அன்பு + எனப்படுவது
பண்பெனப்படுவது - பண்பு + எனப்படுவது

- ❖ எதுகை

ஆற்றுதல் - போற்றுதல்

பண்பு - அன்பு
அறிவு - செறிவு
நிறை - முறை

❖ இலக்கணக் குறிப்பு.
ஒழுகுதல், நோன்றல், பொறுத்தல் - தொழிற்பெயர்.

5. பதிதொறு புயல்பொழி ......

❖ நூல் : நந்திக்கலம்பகம்
❖ ஆசிரியர் பெயர்: அறியவில்லை
❖ பொருள்

புயல் - மேகம்
பணை - மூங்கில்
நிதி - செல்வம்
புனல் - நீர்
கவிகை - குடை
வானகம் - தேவருலகம்

❖ பிரித்து எழுதுக.
கலம்பகம் - கலம் + பகம்
கரைபொருதிழிதரு - கரை + பொருது + இழி + தரு

❖ எதுகை
பதிதொறு - கதிர்தொகு
நிதிதரு - மதியிழி

❖ இலக்கணக் குறிப்பு
வருபுனல் - வினைத்தொகை
இவையிவை - அடுக்குத்தொடர்

6. மீன்நோக்கும் ...........

❖ நூல் : நாலாயிரத்திவ்யபிரபந்தம்
❖ ஆசிரியர்: குலசேகர ஆழ்வார்
❖ பொருள்

தார்வேந்தன் - மாலை அணிந்த வேந்தன்.
கோல் - செங்கோல்

❖ பிரித்து எழுதுக.
பற்றில்லேன் - பற்று + இல்லேன்

❖ எதுகை
மீன்நோக்கும் - பானோக்கா
தானோக்கா - கோனோக்கி

❖ இலக்கணக் குறிப்பு.
தார்வேந்தன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.
வாழுங்குடி - எதிர்காலப் பெயரெச்சம்

7. இன்றிளைப் பாறுவம் ........
- ❖ நூல் : பூத்தது மானுடம்
- ❖ ஆசிரியர் : சாலை இளந்திரையன்
- ❖ பொருள்

  இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்
- ❖ பிரித்தெழுதுக.

  ஓரிரவு ஓர் + இரவு
- ❖ எதுகை

  இன்றிளை - சென்றிளை

  சாதனை - வேதனை
- ❖ இலக்கணக் குறிப்பு

  சாதனைப் பூக்கள் - உருவகம்.

**13. செய்யுள் - நெடுவினாக்கள்.**

**1. ஒழுக்கமுடைமைப்பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?**
- ❖ ஒழுக்கம் ஒருவர்க்கு அனைத்து சிறப்புகளையும் தருகிறது.
- ❖ ஒழுக்கமே சிறந்த துணையாகும்.
- ❖ ஒழுக்கம் உள்ளவர் உயர் குடியினர்.
- ❖ ஒழுக்கம் இல்லாதவர் இழி குடியினர்.
- ❖ ஒழுக்கம் குறைந்தால் குடிபிறப்பின் சிறப்பு கெடும்.
- ❖ ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
- ❖ ஒழுக்கமுடையவர்கள் மேன்மை அடைவர்.
- ❖ நல்லொழுக்கம் நன்மை தரும்.
- ❖ தீயொழுக்கம் துன்பத்தைத் தரும்.

**2 காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**
- ❖ பகை வெல்லக் கருதும் அரசன், காலம் அறிந்து செயல்படவேண்டும்.
- ❖ காலத்திற்கு பொருந்திய செயலை செய்வதே செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிராகும்.
- ❖ தகுந்த கருவிகளோடு காலம் அறிந்து செயல்பட வேண்டும்
- ❖ காலமறிந்து செயல்பட்டால் உலகத்தையே அடையலாம்.
- ❖ ஊக்கமுடையவன் காலத்தை எதிர்பார்த்து வெல்வான்.
- ❖ பகைவரைக் காணும் போது பணிவாக இருத்தல்வேண்டும்.
- ❖ வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல அமைதியாக இருத்தல் வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போது விரைந்து செயலை முடித்தல் வேண்டும்.

**3 ‘தேரா மன்னா’ என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**
- ❖ ஆராய்ந்து அறியாத மன்னனே!
- ❖ புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னன்,
- ❖ பசுவின் துன்பத்தைப் போக்க மகனைக் கொன்ற மனுநீதிச்சோழன்
- ❖ புகார் நகரம் நான் பிறந்த ஊர்.

- ❖ மாசாத்துவானின் மகன் கோவலனை மணம் புரிந்தேன்.
- ❖ ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகர் வந்தோம்,
- ❖ உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி.
- ❖ கண்ணகி என்பது என் பெயர்'' என்று கூறினாள்.

4 **கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக?**

**பாண்டியன்** : கண்களில் நீரொழுக எம்முன் வந்து நிற்கும் நீ யார்?

**கண்ணகி** : ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! சிபி மன்னனும், மனுநீதி சோழனும் பிறந்த ஊர் புகார் நகரம். அப்புகார் நகரமே என் ஊர். என் காற்சிலம்பை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயர்.

**பாண்டியன்** : கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று, அதுவே அரச நீதி.

**கண்ணகி** : அறநெறியில் செல்லாத அரசனே என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது.

**பாண்டியன்** : நீ கூறியது நல்லதே எம்முடையச் சிலம்பின் பரல்கள் முத்துக்களே. **(கோவலனிடம் கைப்பற்றிய காற்சிலம்பு கொண்டுவரப்படுகிறது. கண்ணகி காற்சிலம்பினை ஓங்கி உடைக்கிறாள். அதிலிருந்து மாணிக்கப் பரல்கள் வெளிப்படுகின்றன)**

**பாண்டியன்** : பொன்செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு அறநெறி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்.

**(மன்னன் மயங்கி வீழ்ந்து இறந்தான்.)**

**5 குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக?**

குகன் : எல்லா உயிர்களுக்கும் தலைவனே! தங்களுக்குத் தொண்டு செய்ய வந்துள்ளேன்.

இராமன் : இங்கு அமர்க.

குகன் : தேனையும் மீனையும் கொண்டு வந்துள்ளேன்.

இராமன் : (விருத்தமாதவரை நோக்கி) இப்பொருள்கள் கிடைப்பதற்கு அரியன. தூய்மையானவை, உண்டதற்குச் சமம்.

குகன் : தங்களுக்குத் தொண்டு செய்வேன்.

இராமன் : இனிய நண்பனே! எம்மோடு இருப்பாயாக.

**6. கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியது என்ன?**

- ✠ என் உயிர் போன்றவன் நீ.
- ✠ இலக்குவன் உனக்குத் தம்பி.
- ✠ சீதை உனக்குக் கொழுந்தி.
- ✠ இவ்வுலகம் முழுவதும் உன்னுடையது.
- ✠ நான் உனது ஆளுகைக்கு உரியவன்.
- ✠ துன்பமும் இன்பமும் இயற்கை.

- உடன் பிறந்தவர் நால்வராக இருந்தோம்.
- இனி உன்னுடன் ஐவரானோம்.

**7. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரித்து எழுதுக.**

அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தார்.
அமுது படைக்க வாழக்குருத்து அரிந்து வருமாறு தன் மகனை அனுப்பினார்.
மூத்த திருநாவுக்கரசை பாம்பு தீண்டியது.
திருநாவுக்கரசர் திருநீறு அணிவிக்க மூத்த திருநாவுக்கரசை அழைத்தார்.
'அப்பூதியடிகள் இப்போது இங்கு அவன் உதவான்' என்றார்.
திருநாவுக்கரசர், மூத்த திருநாவுக்கரசு இறந்ததை அறிந்தார்.
ஒன்றுகொலாம் என்னும் திருப்பதிகம் பாடி உயிர்த்தெழு செய்தார்.

## 14. உரைநடை - நெடுவினாக்கள்

**1. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.**

- **தொன்மை**
  1. முதல் மனிதன் தோன்றிய இடம் குமரிக் கண்டம்.
  2. அவன் பேசிய மொழி தமிழ்.
  3. என்றுமுள தென்தமிழ் - கம்பர்.
- **தனித்தன்மை**
  1. இயல், இசை, நாடகம் - மூன்று பிரிவுகள்.
  2. அகம், புறம் - வாழ்வியல் இலக்கணம்.
  3. திருக்குறள் - மாந்தர் இலக்கியம்.
- **தாய்மைச் சிறப்பு**
  1. தமிழ் திராவிட மொழிகளுக்கு தாயாக திகழ்கிறது.
  2. 1800 மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும்,
  3. 180 மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்துள்ளது.
- **நடுவு நிலைமை**
  1. சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை.
  2. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை.
- **பொதுமைப் பண்பு**
  1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்
  2. யாதும் ஊரே யாவரும் கேளிர்
  3. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.

**2. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக**

❖ பெண்கள் கல்வி பெறுவது உரிமை.

- சமூக மாற்றம்.
- ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
- உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தரவேண்டும்.
- கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருத்தல் கூடாது.
- சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டும்.
- சொத்துரிமை வழங்க வேண்டும்.
- அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணி பெறவேண்டும்.

**3. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.**

- குழந்தைத் திருமணத்தை தவிர்த்தல் வேண்டும்.
- தமிழர்களிடம் உள்ள பெருநோய் மணக்கொடை.
- இளைஞர்கள் மணக்கொடையை ஒழிக்க முன்வரவேண்டும்.
- கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்துகொள் வேண்டும்.
- ஆண்பெண் இருபாலருக்கும் ஒழுக்கம் பொதுவானது.

**4. அம்பேத்கரின் அரும்பணிகளைத் தொகுத்தெழுதுக.**

- 1927இல் மகாத்திக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம் நடத்தினார்.
- விடுதலை, தன்னாட்சித் தகுதி இந்தியாவிற்கு வழங்க வேண்டுமென விரும்பினார்.
- 1930இல் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டார்.
- 1946இல் மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
- மும்பையில் சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தைத் தொடங்கினார்.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்.
- அம்பேத்கர், 1946ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

**5. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?**

- சாதி இல்லாத சமுதாயத்தை விரும்பினார்.
- முட நம்பிக்கை, தீய பழக்கங்களை நீக்கினார்.
- மக்கள் ஆட்சி மலர்ந்திட குரல் கொடுத்தார்.
- கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் மனிதன் அடையவேண்டுமென விரும்பினார்.
- மனித நேயம் மலர வேண்டுமென உணர்த்தினார்.
- இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையகாக் கொண்டது" என்றார்.

**6. மேடைப் பேச்சின் கூறுகளை விளக்குக. அல்லது மேடைப் பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிவகைகள் யாவை?**

- எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்பன பேச்சின் முக்கூறுகளாகும்.
- தன்வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்க வேண்டும்.
- சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
- கருத்துகளை வரிசைப்படுத்திப் பேச வேண்டும்.

- ❖ காலமறிந்து பேசவேண்டும்.
- ❖ திரும்ப திரும்ப சொல்லுதல் மிகைப்படுத்தி பேசுதல் கூடாது.
- ❖ உவமை, பழமொழி, சிறுகதை, நகைச்சுவைகளைக் கூறி பேச்சுக்கு அழகு சேர்த்தல் வேண்டும்.
- ❖ சுருக்கத்தைக் கூறி முடித்தல் வேண்டும்.

**7. திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்தெழுதுக.**

- ❖ திரைப்படம் ஒரு அரிய கலை.
- ❖ திரைப்படத்திற்கு உரிய கதை, கதைமாந்தர் தேர்வு செய்யப்படவேண்டும்
- ❖ உரையாடல், பாடல் ஆயத்தம் செய்யப்பட வேண்டும்டும்.
- ❖ நடிகர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்பட வேண்டும்.
- ❖ இயக்குநர் நடிப்பைக் கற்றுத் தரவேண்டும்.
- ❖ ஒலிஒளிப் பதிவு செய்யப்படவேண்டும்.
- ❖ படப்பிடிப்புக் கருவியை உயரமான இடத்தில் பொருத்தவேண்டும்.
- ❖ படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

## 15. மனப்பாடப் பகுதி

### வாழ்த்து

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.

- மாணிக்கவாசகர்.

### திருக்குறள்
### (ஒழுக்கமுடைமை)

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்தவர் எய்தாப் பழி.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

## காலமறிதல்

பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

அருவினை என்ப உளவோ, கருவியாற்
காலம் அறிந்து செயின்.

ஞாலம் கருதினுங் கைகூடும், காலம்
கருதி இடத்தாற் செயின்.

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

\- திருவள்ளுவர்

## சிலப்பதிகாரம்

### மதுரைக் காண்டம் - வழக்குரை காதை

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்

கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

\- இளங்கோவடிகள்.

## தமிழ் வளர்ச்சி

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நுற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- பாவேந்தர் பாரதிதாசன்.

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம் - குகப் படலம்

விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநாள்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்.

- கம்பர்.

## பெரியபுராணம் - அப்பூதியடிகள் புராணம்

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார்.

நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.

\- சேக்கிழார்.

## திருக்குறள்
## பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை,
திறனறிந்து தேர்ந்து கொளல்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,
கெடுப்பார் இலானுங் கெடும்.

முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே,
நல்லார் தொடர்கை விடல்.

## பொருள் செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்,
பொருளல்ல தில்லை பொருள்.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்,
புல்லார் புரள விடல்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

செய்க பொருளைச், செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

\- திருவள்ளுவர்.

## சீறாப்புராணம்
## விலாதத்துக் காண்டம் - புலி வசனித்தப் படலம்

இன்று தொட்டிவண் நெறியினில் உயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த
மன்றல் உன்றிய முகம்மதின் மலரடி வணங்கி
நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை.

- உமறுப்புலர்.

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

- குலசேகர ஆழ்வார்.

## பூத்தது மானுடம் - நிற்க நேரமில்லை

இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி
என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றிளைப் பாறுக முற்றிடத்தே - தம்பி
தேன்வந்து பாயும்உன் நெஞ்சிடத்தே!
சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு
நல்லசெடி இளைப் பாறிடுமோ?
வேதனை யாவும் மறந்ததுபார் - செடி
வெற்றி கொண்டேந்திய பூவினிலே.

- சாலை இளந்திரையன்

**16. பத்திவினா விடை. (பின்வரும் பாடங்களில் பயிற்சி செய்க)**

1. பல்துறை வேலைவாய்ப்புகள்
2. வள்ளலார்
3. காந்தியம்
4. தொன்மைத் தமிழகம்
5. பெரியாரின் பெண்ணுரிமை

# தமிழ்

# இரண்டாம் தாள்

## இலக்கணம்

**01. உரிய விடை தேர்ந்தெடுத்தல் மற்றும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வளையல் இச்சொல்லில் ஐகாரம் ____ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது. **(ஒரு)**
2. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ___________ ஆகும் **(திண்ணை)**
   அ) திண்ணை ஆ) வளையல் இ) ஐந்து
3. பல்+தீது என்பது ____ எனப் புணரும் **(பஃறீது)**
   அ) பல்தீது ஆ) பஃறீது இ) பலதீது
4. குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ____ ஆய்தக்குறுக்கம் என நால் வகைப்படும் **(மகரக்குறுக்கம்)**
5. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் போது, பொம்மை___________ செய்யப்__________ என வரும் **(பூங்குழலியால், பட்டது)**
6. அழகன் பாடம் எழுதுகிறான்,இத் தொடரில் ஓர் எழுவாய் __கொண்டு முடிந்தால் __தொடர் ஆகும் **(ஒரு பயனிலையை, தனிநிலை)**
7. அன்பரசன் திருக்குறளைக் கற்றான் இத்தொடர் பிறவினையாக மாறும் போது, அன்பரசன் திருக்குறளை__எனவரும் **(கற்பித்தான்)**
8. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ______ **(தனிமொழி)**
9. தொழிலைக் குறிக்கும் சொல் _____ **(வினைச்சொல்)**
10. வினைமுற்று _____, ______ என இருவகைப்படும் **(தெரிநிலை வினைமுற்று,குறிப்பு வினைமுற்று)**
11. ஓர் எச்சவினை ___கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும் **(பெயரைக்)**
12. இளவழகன் வந்தான் இது _____ தொடர் **(வெளிப்படை)**
    அ) குறிப்பு ஆ) வெளிப்படை இ) எதுவுமில்லை
13. மாடு' என்னும் சொல் ______ஆகும்.**(அஃறிணைப் பொதுப்பெயர்)**
    அ) உயர்திணைப் பொதுப்பெயர் ஆ) அஃறிணைப் பொதுப்பெயர் இ) விரவுப்பெயர்
14. மாடு கன்றை ஈன்றது இத்தொடரில் மாடு என்பது ______ குறிக்கும் **(பசு)**
    அ) பசு ஆ) காளை இ) கன்று
15. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே _என்பர் **(ஒரு பொருட் பன்மொழி)**

16 ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று _______**(உயர்ந்தோங்கி)**

17. இது செய்வாயா என்னும் வினாவிற்கு ‘கைவலிக்கும்’ எனக்கூறுவது__ விடை**(உறுவது கூறல்)**

18. ஆடத்தெரியுமா? என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக்கூறுவது ___விடை **(இனமொழி)**
19. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது ___ வினா **(கொளல்)**
20. மான் _____ மருளும் பார்வை (உரிய உவம உருபை இணைத்து எழுதுக **(போலும்)**
21. தொகை உவமைகளை விரியுவமையாக மாற்றுக
    அ.மதிமுகம் ஆ.பவளவாய் **(மதிபோன்ற முகம்,பவளம் போன்றவாய்)**
22. விரியுவமைகளைத் தொகையுவமைகளாக மாற்றுக **(கயல்விழி, கிளிமொழி)**
    அ) கயல்போன்ற விழி, ஆ) கிளி போன்ற மொழி
23. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது _____
    **(நிலைமொழிஈறும்,மெய்யும் நீங்கும்)**
    அ.நிலைமொழி ஈறு நீங்கும் ஆ.நிலைமொழிஈறும்,மெய்யும் நீங்கும் இ.வருமொழி முதல்கெடும்.
24. மேற்கு + நாடு என்பது __எனச்சேரும் **(மேனாடு)**
    அ) மேற்குநாடு ஆ) மேநாடு இ) மேனாடு
25. கருமை+குழி என்பது _____எனும் விதிகளின்படி புணரும். **(ஈறுபோதல்,இனமிகல்)**
    அ)ஆதிநீடல்,இனமிகல் ஆ)தன்னொற்றிரட்டல்,இடையுகரம் இ)ஆதல்இ.ஈறுபோதல்,இனமிகல்
26. அகம்,புறம் ஆகிய இரண்டும் _______ இலக்கணம் ஆகும் **(பொருள் இலக்கணம்)**
27. குறிஞ்சி,முல்லை முதலிய ஐந்தும் _____எனப்படும் **(அன்பின் ஐந்திணை)**
28. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி __ பகுதியாகும் **(கடலும் கடல் சார்ந்த)**
29. யாமம் என்பது இரவு 10.00 மணி முதல் ___வரை ஆகும் **(இரவு 2.00 மணி)**
30. மருதம்,நெய்தல்,ஆகிய இரண்டிற்கும் ___ பெரும்பொழுதுகளும் வரும் **(ஆறு)**
31. திருமால்__ நிலத்திற்குரிய தெய்வம் **(முல்லை)**
32. மணமுழா,நெல்லரிகிணை ஆகிய இரண்டும்______ திணைக்குரிய பறைகள் **(மருத)**
33. நெய்தல் திணைக்குரிய தொழில் _____ ஆகும் **(மீன்பிடித்தல்,உப்பு விளைத்தல்)**
34. பொருள் இலக்கணம் ___ வகைப்படும் **(இரண்டு)**
35. அகத்திணைகள் _____வகைப்படும் **(ஏழு)**
36. மார்கழி,தை ஆகிய இரண்டும் _____ காலத்திற்குரியன **(முன்பனி)**
37. மருத நிலத்திற்குரிய தெய்வம் _____ **(இந்திரன்)**
38. பாலை நிலத்திற்குரிய பறவைகள் _____ **(புறா,பருந்து)**
39. புறத்திணைகள்______ வகைப்படும் **(பன்னிரண்டு)**
40. நிரை கவர்தல் என்பது______**(வெட்சி)**
41. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது________**(வஞ்சித்திணை)**
42. பாடாண் திணை என்பது ______கூறுவது **(ஆண்மகனின் ஒழுகலாறுகள்)**
43. ஒரு தலைக் காமம் என்பது _____ **(கைக்கிளை)**
44. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது____ ஆகும்
    **(காஞ்சி)**
45. உலகு' என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்ப்பாடு
    ___________ஆகும் **(பிறப்பு)**
46. நல்லவை' - இச்சொல்லை அலகிட்டால் ____எனப் பிரியும் **(நேர்நிரை)**
47. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி ____வரும் **((முச்சீராய்)**

48. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் _____முடிவது சிறப்பு **(ஏகாரத்தில்)**
49. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று _____விகற்பத்தானும்__ விகற்பத்தானும் வரும் **(ஒரு, இரு)**
50. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது _____ ஆகும் **(இன்னிசை வெண்பா)**
51. வெண்பாவின் ஓசை _____ ஆகும் **(செப்பலோசை)**
52. ஆசிரியப் பாவின் வேறு பெயர் ____ ஆகும் **(அகவற்பா)**
53. ஆசிரியப் பாவின் ஓசை _______ ஆகும் **(அகவலோசை)**

## 02 ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

1) கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் **பணிந்தான்**.
கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் **பணிந்தனர்**
2) பெண்கள் **பெறவேண்டியது** பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
பெண்கள் **பெறவேண்டியவை** பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
3) இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தது**
இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தன**.
4 வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்படவேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தது**.
வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்படவேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தன.**
5 புலவர்கள் பொங்கற் புது நாள்களின் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினார்.**
புலவர்கள் பொங்கற் புது நாளின் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினர்.**
6 மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர் நாடி **போன்றது.**
மேடைப் பேச்சுககுக் கருத்துகளே உயிர் நாடி **போன்றவை.**
7 ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் **கண்டுபிடித்தனர்**.
ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் **கண்டுபிடித்தார்**.
8 இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றது**.
இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றனர்**
9 காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் **கிடந்தது.**
காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் **கிடந்தன**.
10 தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தன.**
தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது**.
11 ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தார்கள்.**
ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**
12 மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதா.**
மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**
13 பெண்கள் எல்லாத்துறையிலும் **பணிபுரிகின்றாள்**
பெண்கள் எல்லாத் துறையிலும் **பணிபுரிகின்றனர்**
14 தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளது.**

தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளன.**

**03 சந்திப்பிழை நீக்கி எழுதுக**.

1 ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி அனைத்து துறைகளிலும் கொடுக்க வேண்டும்
ஆண்களை**ப்** போலவே பெண்களுக்கும் அரசு**ப்** பணி அனைத்து**த்** துறைகளிலும் கொடுக்க வேண்டும்.

2 ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம் .
ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை**ப்** பயணமாம் **.**

3 .ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்
ஆசிரியர் பெயரை**த்** தம் பெயருடன் சேர்த்து**ப்** பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

4. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
ஏழைகளுக்கு**ப்** பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று**த்** தந்தார்.

**5.** மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.
மேடை**ப்** பேச்சு மிகுந்த பயனை**த்** தரவல்லது.

6. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு.
மக்களை இலட்சிய**ப்** பார்வையிலே அழைத்து**ச்** செல்லும் வன்மையுடையதே மேடை**ப்** பேச்சு

7. திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
திரை**ப்**படம் எடுக்க**ப்** பயன்படும் பட**ச்**சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

8. திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.
திரை**ப்**படம் மக்களை**த்** தன்பால் ஈர்த்து**க்** கட்டி**ப்** போடவல்லது.

9. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளஙகுகிறது
மனித இனத்தின் மரபு**ச்** செல்வமாக**த்** தமிழ்மொழி விளங்குகிறது

10. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்
தமிழில் வரலாற்று**க்** கருத்துகளையும், பண்பாட்டு**க்** கூறுகளையும் காண முடியும் .

11. வள்ளலார் அருளிய வழிகளை கடை பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
வள்ளலார் அருளிய வழிகளை**க்** கடை**ப்** பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

12. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.
அறிவு ஒளிபெற அங்கே**ச்** சோதி தரிசன**ப்** பதுமையை**ப்** புகுத்தினார்.

13. கைதொழில் ஒன்றை கற்று கொள்.
கை**த்**தொழில் ஒன்றை**க்** கற்று**க்**கொள்.

14. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறிவந்தனர்.
பெண்கள் குடும்பத்தை**ப்** பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல**க்** கூடாதெனவும் கூறிவந்தனர்.

**04**. <u>I.</u> பொருத்துக

1.ஐகாரக்குறுக்கம் - அ. மு.்.டீது

2.ஔகாரக்குறுக்கம் - ஆ. தலைவன்
3.ஆய்தக்குறுக்கம் - இ. போன்ம்
4.மகரகுறுக்கம் - ஈ. வௌவால் விடை:- 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ

## II. பொருத்துக

1. வெளிப்படைச் சொற்கள் - அ. சோறு உண்டான்
2. குறிப்புச்சொல் - ஆ. கல்,மண்
3. இனங்குறித்தல் - இ. இருவர் குழந்தை பெற்றனர்

விடை :- 1- ஆ, 2- இ, 3-அ

## III. பொருத்துக

1. அறிவினா - அ. வருவாயா? எனில் வாரேன் என்பது
2. ஏவல்விடை - ஆ. உண்டாயா?எனில் வயிறு வலிக்கும் என்பது
3. மறைவிடை - இ. இதனைச் செய்வாயா? எனில் நீயே செய் என்பது
4. உறுவது கூறல்- ஈ. "இதன் பொருள்யாது" என ஆசிரியர்மாணவரிடம் கேட்பது **விடை:-** 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ

## IV. பொருத்துக

1. ஈறு போதல் - அ. வெற்றிலை
2. ஆதி நீடல் - ஆ. செந்தமிழ்
3. இனமிகல் - இ. செம்மொழி
4. தன்னொற்றிரட்டல் - ஈ. மூதூர் **விடை:-** 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ

## V. பொருத்துக

**நிலம் - விலங்கு**

1. குறிஞ்சி - அ.முயல்,மான்
2. முல்லை - ஆ.புலி,கரடி
3. மருதம் - இ.முதலை,சுறா
4. நெய்தல் - ஈ.எருமை,நீர்நாய் **விடை:-** 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ

## VI.இளமைப் பெயர்களைப் பொருத்துக.

1. ஆடு - அ. கன்று
2. மான் - ஆ. பிள்ளை
3. கீரி - இ. குட்டி
4. சிங்கம் - ஈ.குஞ்சு
5. கோழி - உ.குருளை **விடை** :1-இ, 2-அ, 3-ஆ, 4-உ, 5-ஈ

## VII. பொருத்துக.

1. மயில் - அ. கரையும்
2. கூகை - ஆ. கத்தும்
3. யானை - இ. குழறும்
4. காகம் - ஈ. அகவும்
5. ஆடு - உ. பிளிறும் விடை :1-ஈ, 2-இ, 3-உ, 4-அ, 5. ஆ

## 05. இலக்கணக் குறிப்பு - அறிக.

### 1. குறுக்கங்கள்:

1. ஐகாரக்குறுக்கங்கள்:

   1. ஐம்பது 2. ஐப்பசி 3. தலைவன் 4. சபை 5. கடலை
   6. தலைவி 7. வளையல் 8. ஐந்து 9. திண்ணை 10. தலைவன்

2. ஒளகாரக் குறுக்கங்கள்:

   1. ஒளவை 2. வெளவால் 3. மெளனம் 4. கெளதாரி 5. ஒளடதம்
   6. மெளவல்

3. ஆய்தக் குறுக்கம்:

   1. க∴றீது 2. மு∴டீது

4. மகரக் குறுக்கம்:

   1. போன்ம் 2. மருண்ம் 3. வரும் வண்டி 4. தரும் வளவன்

### 2. மூவகை மொழிகள்:

1. தனிமொழி:

   1. வா 2. கண் 3. செய்தான்

2. தொடர்மொழி:

   1. படம் பார்த்தான் 2. பூவிழி வந்தாள் 3. பசுவும் கன்றும் மேய்ந்தன

3. பொது மொழி

   1. பலகை 2. வைகை 3. தாமரை 4. வேங்கை 5. அந்தமான் 6. எட்டு

### 3 ஓரெழுத்தொருமொழி:

1. பூ 2. கை 3. தா 4. வா 5. தீ 6.கோ 7. ஐ

### 4. தெரிநிலை வினைமுற்று

1. இராமன் வந்தான் 2. கண்ணன் நடந்தான் 3. அருளரசு வந்தான்
3. வளவன் நடந்தான் 5. உழுதான்

### 5. குறிப்பு வினைமுற்று:

1. பொன்னன் 2. விழுப்புரத்தான் 3. சித்திரையான்
4. கண்ணன் 5. நல்லன் 6. உழவன்.

### 6. தெரிநிலைப் பெயரெச்சம்:

1. படித்த கயல்விழி 2. சென்ற கோதை 3. படிக்கின்ற கயல்விழி
4. செல்கின்ற கோதை 5. படிக்கும் கயல்விழி 6. செல்லும் கோதை
. 7. வந்த பையன் 8. உண்ட இளங்கோவன்

### 7. குறிப்புப் பெயரெச்சம்

1. நல்ல பையன் 2. நல்ல மாணவன்

### 8. எதிர்மறைப் பெயரெச்சம்:

1. உண்ணாத இளங்கோவன் 2. தீய மாணவன்

**9. தெரிநிலை வினையெச்சம்:**

1. படித்து வந்தான் 2. பாடக் கேட்டான் 3. ஓடிச்சென்றான்
5. போய்ப் பார்த்தான் 5. படித்துத் தேறினான் 6. படிக்கச் செல்கிறான்
7. படித்து வருவான்

**10. குறிப்பு வினையெச்சம்:**

1. மெல்லப் பேசினான் 2. நோயின்றி வாழ்ந்தான்

**11. முற்றெச்சம்:**

1. கயல்விழி வந்தனள் பாடினள் 2. முருகன் படித்தனன் தேறினன்
3. நந்தினி வநதனள் போயினள்

**12. வெளிப்படை குறிப்பு**

| வெளிப்படை | குறிப்பு |
|---|---|
| 1. கல், மண் | 1. தமிழ்நாடு முதலிடம் |
| 2. தமிழ்நாடு தலைசிறந்தது | 2. இருவர் குழந்தை பெற்றனர் |

**13. ஒன்றொழிப் பொதுச்சொல்**

1. ஐவர் கோலமிட்டனர் 2. ஐவர் போர்க்களம் சென்றனர்
3. இம்மாடு வயலில் உழுகிறது. 4. இம்மாடு பால் கறக்கும்
5. மாடு கன்றை ஈன்றது 6. ஐவர் குங்குமம் இழந்தனர்

**14. இனங்குறித்தல்:**

1. வெற்றிலை தின்றான் 2. சோறு உண்டான்

15. **அடுக்குத் தொடர்**

1. அன்றோ அன்றோ 2. போ போ 3. எறி எறி
4. வருக வருக 5. தீ தீ தீ 6. நொந்தேன் நொந்தேன்
7. கோடி கோடி கோடி 8. பாம்பு பாம்பு 9. வா வா வா

**16. இரட்டைக் கிளவி**

1. படபட 2. கலகல 3. சலசல 4. மடமட 5. கடகட

**17. ஒருபொருட்பன்மொழி:**

1. உயர்ந்தோங்கி 2. மீமிசை 3. குழிந்தாழ்ந்து
4. ஒருதனி 5. நடுமையம் 6. வாடிவதங்கிய

**18. வினா-விடை**

1. ஐயவினா
   1. எருதுவோ? பசுவோ? 2. பாம்போ? கயிறோ? 3. ஆணோ? பெண்ணோ?
2. இனமொழி விடை:
   1. ஆடத்தெரியுமா? பாடத் தெரியும்.
   2. கட்டுரைஎழுதத் தெரியுமா? கவிதை எழுதத் தெரியும்.
   3. கைப்பந்து விளையாடுவாயா? கால்பந்து விளையாடுவேன்.

**19. உவம உருபுகள்:**

1. போல - கிளிபோலப் பேசினாள்

2. புரைய - வேய்புரை தோள்
3. ஒப்ப - தாயொப்பப் பேசும் மகள்
4. உறழ - முழவு உறழ் தடக்கை
5. அன்ன - மலரன்ன சேவடி
6. மான - காயம் மூழ்கு மகளிர்கண் மானும் தாமரைஷ
7. கடுப்ப - பாம்பின் வைந்துணி கடுப்ப
8. இயைய - மின்னிற்கு இயைய மிளிரும்
9. நேர் - பொன்நேர் புதுமலர்
10. நிகர் - கண்ணொடு நிகர்க்கும் கழிப்பூங்குவளை
11. இன்ன - யாழின் இன்ன இன்சொல்
12. ஏய்ப்ப - அம்பு நுனி ஏய்ப்ப அரும்பிய இருப்பை

**20.**

| விரியுவமை | தொகையுவமை |
|---|---|
| 1. தேன்போன்ற மொழி | தேன்மொழி |
| 2. பவளம் போன்ற வாய் | பவளவாய் |

**21.**

| உவமை | - | உருவகம் |
|---|---|---|
| 1. அமுதமொழி | | மொழியமுது |
| 2. கயற்கண் | | கண்கயல் |
| 3. தேன்தமிழ் | | தமிழ்த்தேன் |
| 4. பூவிரல் | | விரல்பூ |
| 5. மதிமுகம் | | முகமதி |
| 6. மலரடி | | அடிமலர் |
| 7. முத்துப்பல் | | பல்முத்து |
| 8. விற்புருவம் | | புருவவில் |
| 9. மலர்ப்பாதம் | | பாதமலர் |
| 10. பவளவாய் | | வாய்ப்பவளம் |
| 11. கயல்விழி | | விழிக்கயல் |
| 12. கனிவாய் | | வாய்க்கனி |

**22. புணர்ச்சி**

1. இயல்பு புணர்ச்சி - பொன் + வளையல் = பொன்வளையல்
2. விகாரப் புணர்ச்சி - வாழை + பழம் = வாழைப்பழம் (தோன்றல்)
   மரம் + வேர் = மரவேர் (கெடுதல்)
   பொன் + குடம் = பொற்குடம் (திரிதல்)
3. திசைப்பெயர் புணர்ச்சி
   1. வடகிழக்கு 2. வடமேற்கு 3. தென்மேற்கு 4. தென்கிழக்கு
   5. கீழ்நாடு 6. மேனாடு 7. தென்கிழக்கு 8. வடமலை
4. பண்புப் பெயர்புணர்ச்சி
   1. கருவிழி 2. பெரியன் 3. பாசிலை 4. பைங்கூழ்

5. சிற்றோடை 6. சேதாம்பல் 7. கருங்குயில் 8. வெற்றிலை
9. செந்தமிழ் 10. செம்மொழி 11. மூதூர் 12. கரும்பலகை

5. மகர ஈற்றுப் புணர்ச்சி
1. மரவடி 2. வட்டக்கல் 3. நிலங்கடந்தான் 4. மரவேர்

**23. அகத்திணை:**

| திணை | பெரும்பொழுது | மாதம் | சிறுபொழுது | காலம் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம் முன்பனி | ஐப்பசி, கார்த்திகை மார்கழி, தை | யாமம் | இரவு 10.00 - 2.00 |
| முல்லை | கார்காலம் | ஆவணி, புரட்டாசி | மாலை | மாலை 6.00 - 10.00 |
| மருதம் | ஆறு பெரும் பொழுதுகள் | 12 மாதங்கள் | வைகறை, காலை | இரவு 2.00 - 6.00<br>காலை 6.00 - 10.00 |
| நெய்தல் | ஆறு பெரும் பொழுதுகள் | 12 மாதங்கள் | எற்பாடு | பிற்பகல்2.00 - 6.00 |
| பாலை | இளவேனில், முதுவேனில் பின்பனி | சித்திரை, வைகாசி ஆனி, ஆடி மாசி பங்குனி | நண்பகல் | காலை 10..00 - 2.00 |

**24. புறத்திணைகள்:**

1. வெட்சி - நிரைகவர்தல்
2. கரந்தை - நிரை மீட்டல்
3. வஞ்சி - பகைமேற் செல்லல்
4. காஞ்சி - எதிர் நிற்றல்
5. நொச்சி - மதில் காத்தல்
6. உழிஞை - மதில் வளைத்தல்
7. தும்பை - அதிரப்பொருதல்
8. வாகை - செருவென்றல்
9. பாடாண் - ஆண் மகனின் ஒழுகலாறு
10. பொதுவியல் - அனைத்து திணைகளுக்கும் பொதுவானது
11. கைக்கிளை - ஒருதலைக்காமம்
12. பெருந்திணை - பொருந்தாக்காமம்

**25. வல்லினம் மிகும் மிகா இடங்கள் (க்,ச்,த்,ப்)**

| மிகுமிடம் | மிகா இடம் |
|---|---|
| 1. கறிக்குழம்பு | 1. காய்கறி |
| 2. பலாச்சுளை | 2. கதைசொன்னார் |
| 3. வாழைப்பழம் | 3. தாய்தந்தை |
| 4. அவனுக்குத்தா | 4. பாய்புலி |

**26. தொகைச்சொல் விரிக்க**

1. முக்கனி - மா, பலா, வாழை
2. இருவினை - நல்வினை, தீவினை - தன்வினை, பிறவினை
3. இருதிணை - உயர்திணை, அஃறிணை- அகத்திணை, புறத்திணை
4. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
5. முப்பால் - அறம், பொருள், இன்பம்
6. மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை
7. மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்
8. நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
9. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
10. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
11. ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.
12. ஐம்புலன் - தொடு உணர்வு, உண்ணல், நுகர்தல், காணல், கேட்டல்
13. ஐம்பொறி - மெய், வாய், மூக்கு, கண், செவி

**27. உம்மைத்தொகை:**

1. வெற்றிலை பாக்கு 2. இராப்பகல் 3. தாய்தந்தை

**28. எண்ணும்மை:**

1. தேரும் திருவிழாவும் 2. தாயும் சேயும் 3. கபிலரும் பரணரும்

**29. வினைத்தொகை:**

1. செய்தொழில் 2. சூழ்கழல் 3. உகுநீர் 4. விரிகடல்
5. பொங்குகடல் 6. குளிர்தமிழ்

**30. பகுதியை எடுத்தெழுதுக.**

1. நடந்தான் - நட 2. உழுதான் - உழு 3. வந்தான் - வா
4. படித்தான் - படி 5. நடித்தார் - நடி 6. கேட்ட - கேள்

**31. வினையெச்சமாக்குக.**

1. பெறு - பெற்று 2. படி - படித்து 3. நட - நடந்து
4. செய் - செய்து 5. ஓடு - ஓடி

**32. இடைநிலைகள்:**

1. த்,ட்,ற்,இன் - இறந்தகால இடைநிலைகள்.
   1. வந்தான் - த் 2. உண்டான் - ட் 3. நின்றான் - ற் 4. பாடினான் - இன்
2. கிறு, கின்று, ஆநின்று - நிகழ்கால இடைநிலைகள்
   1. வருகிறான் - கிறு 2. படிக்கின்றான் - கின்று 3. நடவாநின்றான் - ஆநின்று
3. ப், வ் - எதிர்கால இடைநிலைகள்:
   1. உண்பான் - ப் 2. வருவான் - வ்
4. ஆ - எதிர்மறை இடைநிலை:
   1. செய்யாதான் 2. செய்யான்

**33. வியங்கோள் வினைமுற்று விகுதி: (க, இ , இய, இயர்)**

1. வாழ்க 2. வாழி 3. வாழிய 4. வாழியர்

**34. உரிச்சொல் தொடர்:**

(1. சால, தவ, நனி, உறு, கழி, கூர், மா, தட, கடி, களி,)

1. நனிநன்று 2. தடக்கரி 3. மாமலை

**35. அளபெடைகள்:**

1. ஆஅ, ஓஒ - செய்யுளிசை - தொழாஅள், ஓஒதல்
2. ஊஉ - இன்னிசை - கெடுப்பதூஉம்
3. ஈ,இ, ஐஇ - சொல்லிசை - தழீஇய, உரனசைஇ

**36. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் - 'ஆ'**

1. பொய்யா விளக்கு 2. எய்தாப் பழி 3. தேரா மன்னா

**37. வினையாலணையும் பெயர் - அர், அன், அள்**

1. வந்தவர் 2. சென்றவன் 3. படியவள்

**38. மரபுத் தொடர்களுக்கான பொருளறிதல்.**

1. ஆயிரங்காலத்துப் பயிர் - நீண்ட காலத்திற்குரியது.
2. எடுப்பார் கைப்பிள்ளை - தன்சிந்தனையின்றி சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர்
3. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது - பட்டறிவில்லாத படிப்பு
4. அவலை நினைத்து உரலை இடித்தல் - எண்ணமும் செயலும் ஒத்துவராமை
5. முதலைக் கண்ணீர் - பொய்யழுகை
6. அவசரக்குடுக்கை - எண்ணித் துணியாதார்
7. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று
8. கம்பி நீட்டல் - சொல்லிக் கொள்ளாமல் செல்லல்
9. தாளம் போடுதல் - எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக் கொள்ளல்
10. கானல் நீர் - இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது
11. பஞ்சாய்ப் பறத்தல் - அலைந்து திரிதல்.
12. குட்டிச்சுவர் - பயனின்றி இருத்தல்
13. கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்
14. பசுமரத்தாணி - ஆழப்பதிதல்
15. வாழையடி வாழை - பரம்பரை பரம்பரையாக
16. கொடிகட்டி - தனிப்புகழோடு விளங்குதல்

**39. ஒலிமரபு**

1. ஆடு கத்தும்
2. எருது எக்காளமிடும்
3. குதிரை கனைக்கும்
11. ஆந்தை அலறும்
12. காகம் கரையும்
13. கிளி பேசும்

| | |
|---|---|
| 4. குரங்கு அலப்பும் | 14. குயில் கூவும் |
| 5. சிங்கம் முழங்கும் | 15. கூகை குழறும் |
| 6. நரி ஊளையிடும் | 16. கோழி கொக்கரிக்கும் |
| 7. புலி உறுமும் | 17. சேவல் கூவும் |
| 8. யானை பிளிறும் | 18. புறா குனுகும் |
| 9. பூனை சீறும் | 19. மயில் அகவும் |
| 10. எலி கீச்சிடும் | 20. வண்டு முரலும் |

**40.பிற மொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச் சொற்களை எழுதுதல்**

1. வேலன் சுயதொழிலில் அதிக லாபம் ஈட்டினான்

   விடை : வேலன் தன்சொந்த தொழிலில் மிகுந்த வருவாய் ஈட்டினான்

2. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது

   விடை : அந்த அறிவியல் அறிஞரின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது

3. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துக் கொள்ள தலைவர் அழைப்புவிடுத்தார்.

   விடை : அனைவரையும் உண்ணா நோன்பு போராட்டத்தில் கலந்துக் கொள்ள தலைவர் அழைப்புவிடுத்தார்.

**06.குறுவினாக்கள் :**

1. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக?

மொழி முதல் ,இடை,கடை ஆகிய மூவிடங்களில் வரும் “ஐகாரம்” தன் மாத்திரை அளவிலிருந்துகுறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

(எ-டு) ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.
தலைவன் – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.
கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.

2. ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் தனது இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவாய் ஒலிக்கும்

சான்று: ஔவை, வௌவால்

3. சொல் என்றால் என்ன?

ஓர் எழுத்து தனித்து நின்றோ,பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். சான்று - பூ, பூக்கள்

4. மொழியின் வகைகள் யாவை?

மொழி மூன்று வகைப்படும் அவை தனிமொழி,தொடர்மொழி,பொதுமொழி என்பவையாகும்.

5. பொதுமொழி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாய் அமைவது. சான்று: அந்தமான் - தீவு, அந்த மான் : விலங்கு

6. முற்றெச்சம் என்றால் என்ன?

ஒரு வினை முற்றுச் சொல் எச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும். (எ.டு) நந்தினிவந்தனள், போயினள்.

7. தெரிநிலை வினைமுற்றுச் சான்றுடன் விளக்குக?

செய்பவன்,கருவி,நிலம்,செயல்,காலம்,செய்பொருள் என்னும் ஆறனையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலைவினைமுற்றாகும்

(எ.டு) உழவன் வயலை உழுதான்

| | | | |
|---|---|---|---|
| செய்பவன் | - உழவன் | கருவி | - கலப்பை |
| நிலம் | - வயல் | செயல் | - உழுதல் |
| காலம் | - இறந்தகாலம் | செய்பொருள் | - நெல் |

8. இனங்குறித்தல் என்றால் என்ன? எ.கா. தருக.

ஒரு சொல், தன் பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும். (எ.கா) கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

9. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக?

அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம், முதலிய பொருள் நிலைக்கும் செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு,மூன்று,நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் ஆகும்.

(எ.டு) 1. வாழ்க! வாழ்க! - மகிழ்ச்சி 2. பாம்பு! பாம்பு! - அச்சம்.

10. அடுக்குத் தொடருக்கும் இரட்டைகிளவிக்கும் உள்ள வேறுபாடு யாது?

| | அடுக்குத் தொடர் | இரட்டைகிளவி |
|---|---|---|
| 1. | சொற்கள் தனித்தனியே நிற்கும் | சொற்கள் ஒன்றுபட்டுநிற்கும் |
| 2. | பிரித்தால் பொருள் தரும் | பிரித்தால் பொருள் தராது |
| 3. | இரண்டு,மூன்று,நான்கு முறை அடுக்கி வரும் | இரண்டு முறை மட்டுமே அடுக்கி வரும் |
| | சான்று - பாம்பு பாம்பு | சான்று - கல கல |

11. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வினா ஆறுவகைப்படும் அவை,

அறிவினா,அறியாவினா,ஐயவினா,கொளல்வினா,கொடைவினா,ஏவல்வினா-

12. விடை எத்தனை வகைப்படும்? அவையாவை?

எட்டு வகைப்படும் அவை,

1. சுட்டுவிடை 2. மறைவிடை 3. நேர்விடை 4. ஏவல்விடை 5. வினாவெதிர் வினாதல்விடை 6. உற்றது உரைத்தல்விடை 7. உறுவது கூறல்விடை8. இனமொழிவிடை.

13.ஒரு பொருட் பன்மொழி என்றால் என்ன?எடுத்துக்காட்டு தருக?

பொருட் சிறப்புக்காக ஒரு பொருளைக் குறிக்க பல சொற்கள் வருவது ஒரு பொருட் பன்மொழியாகும். (எ.கா) 1.நடுமையம், 2. மீமிசை ஞாயிறு

14. உவம உருபுகள் யாவை ?

போல,புரைய,ஒப்ப, உறழ, அன்ன,இன்ன என்பன உவம உருபுகளாகும்.

15. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?

1. செம்மை + மொழி = செம்மொழி
2. ‘ஈறுபோதல் விதிப்படி’ மை கெட்டு செம்மொழி என்று புணர்ந்தது.

16. வெற்றிலை புணர்ச்சி விதி கூறுக.

1. வெற்றிலை - வெறுமை + இலை
2. வெறு + இலை - ஈறுபோதல்
3. வெற் + இலை - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
4. வெற்ற் + இலை - தன்னொற்றிரட்டல்.
5. வெற்றிலை - உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

17. முதற்பொருள் என்பது யாது?
நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

18. கருப் பொருள் என்பது யாது?
அந்தந்த (ஐவகை) நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, முதலிய பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும்.

19. கருப்பொருள் அட்டவணை

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | குறவர்,<br>குறத்தியர் | ஆயர்.<br>ஆய்ச்சியர் | உழவர்,<br>உழத்தியர் | பரதன்,<br>பரத்தியர் | எயினர்,<br>எயிற்றியர் |
| உணவு | மலைநெல்,<br>திணை | வரகு,<br>சாமை | செந்நெல்,<br>வெண்ணெல் | மீன்,உப்புக்குப்<br>பெற்றபொருள் | சூறையாடலால்<br>வரும்பொருள் |
| யாழ் | குறிஞ்சி<br>யாழ் | முல்லை<br>யாழ் | மருதயாழ் | விளரி<br>யாழ் | பாலை<br>யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல்,<br>கிழங்குஅகழ்தல் | ஏறுதழுவுதல்<br>நிரைமேய்த்தல் | நெல்லரிதல்,<br>களைபறித்தல் | மீன்பிடித்தல்,<br>உப்புவிளைத்தல் | வழிப்பறி,<br>நிரைகவர்தல் |

20. புறத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
புறத்திணை பன்னிரண்டு வகைப்படும், அவை

1. வெட்சித்திணை 2.கரந்தைத்திணை 3.வஞ்சித்திணை
4.காஞ்சித்திணை 5. நொச்சித்திணை 6.உழிஞைத்திணை,
7.தும்பைத்திணை 8.வாகைத்திணை 9. பாடாண்திணை 10.பொதுவியல்திணை
11.கைக்கிளைத்திணை 12.பெருந்திணை- என்பவையாகும்.

21. நால்வகைப் பாக்கள் யாவை?

வெண்பா,ஆசிரியப்பா,கலிப்பா,வஞ்சிப்பா என "பா"நால்வகைப்படும்.

22. வெண்பாவின்வகைகள்யாவை?

வெண்பா ஆறுவகைப்படும் அவை,

1. குறள்வெண்பா 2. நேரிசைவெண்பா 3.இன்னிசைவெண்பா
4. ப.்.றொடை வெண்பா 5. நேரிசைச்சிந்தியல்வெண்பா
6. இன்னிசைச் சிந்தியல்வெண்பா என்பவையாகும்.

23. ஆசிரியப்பாவின்வகைகள் யாவை?
1. நேரிசை ஆசிரியப்பா 2. இணைக்குறள்ஆசிரியப்பா 3. நிலைமண்டில ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

## 07. சிறுவினாக்கள்

1. வெண்பாவின் பொது இலக்கணத்தை கூறுக?

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய்வரும்.
2. இயற்சீர(மாச்சீர,விளச்சீர) வெண்சீர (காய்சீர) வரும் பிற சீர்கள்வராது.
3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன்நிரை விளமுன்நேர்) வெணசீர் வெண்டளையும் (காய்முன்நேர்)வரும் பிற தளைகள்வராது.
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள்,மலர்,காசு,பிறப்பு என்னும் ஓரசை வாய்பாடுகளுள் ஒன்று கொண்டுமுடியும்.
5. செப்பலோசை பெற்றுவரும்.
6. இரண்டடி முதல்,பன்னிரண்டு அடிவரை வரும்.

2. அடிமறி மண்டில ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப்படித்தாலும் ஓசையும்,பொருளும் மாறாது வருவது அடிமறி மண்டில ஆசிரியப்பா எனப்படும். (எ.டு) தாய்மொழி வளர்த்தல் தமிழர் தம் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
தாய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது.

3. தற்குறிப்ற்ேற அணி:

**அணி வரையறை : தன் + குறிப்பு + ஏற்றம் = தற்குறிப்பேற்றம்**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

**சான்று:** "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்து கைகாட்ட"

**விளக்கம்:**

**இயல்பான நிகழ்வு.:** மதுரை மதில் மீது காற்றில் கொடி அசைதல்.

**தற்குறிப்பு:** மதுரையின் மதில் மேல் உள்ள கொடி, மதுரைக்கு வரும் கோவலனையும் கண்ணகியையும் பார்த்து, இங்கு வந்தால் தீங்கு விளையும் வராதீர் என்று மறித்துக் கையைக் காட்டுகிறது.

**4. வஞ்சப் புகழ்ச்சி அணி:**

**அணி வரையறை:**

புகழ்வது போல பழித்தலும் பழிப்பது போல புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சி அணி.

**சான்று:** தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

**விளக்கம்:** (புகழ்வது போல பழித்தல்)

**புகழ்தல்:** கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பாவர்.

**பழித்தல்:** கயவர்கள் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்பவர்.

**5. சொற்பொருள் பின்வரு நிலையணி:**

**அணி வரையறை:**

செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஓரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**சான்று:** தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

**விளக்கம்:** தீய செயல்கள், தம்மை செய்தவனுக்குத் தீமை தருவதால், அவை தீயை விட அதிகமாக அஞ்சத்தக்கவையாகும்.

**6.அலகிட்டு வாய்ப்பாடு வாய்பாடு கூறுதல்**

**குறிப்பு:** 1. மெய்யெழுத்தின் பக்கத்தில் / குறியிடுதல்

2. நெடில் பக்கத்தில் / குறியிடுதல்

3. இரு குறில் அடுத்து / குறியிடுதல்

4. ஒற்று மற்றும் ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க. இரண்டு எழுத்து இருப்பின் நிரை எனக் கொள்க.

இவ்விதியைப் பின்பற்றி கீழ்க்கண்ட குறட்பாவைப் பிரித்துக் காண்போம்.
எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே செய்தற் கரிய செயல்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | எய் /தற் | நேர் நேர் | தேமா |
| 2 | கரி/ய | நிரை நேர் | புளிமா |
| 3 | தியைந் /தக் /கால் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4 | அந் /நிலை/ யே | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 5 | செய் /தற் | நேர் நேர் | தேமா |
| 6 | கரி/ய | நிரை நேர் | புளிமா |
| 7 | செயல் | நிரை | மலர் |

**08..துணைப்பாடக் கட்டுரைகள்:**

1. பரிதிமாற்கலைஞர்
2. மெல்ல மெல்ல மற
3. அன்றாட வாழ்வில் சட்டங்கள் (பக்கம் 61 பார்த்து படிக்கவும்)
4. பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்
5. குறட்டை ஒலி
6. நூலகம்.

**09. தயக்கமின்றி தமிழல் எழுதுவோம்.**

ஷாப்பிங் - கடைக்கு
வொய் டாடி - ஏன் தந்தையே ?
கால் - அழைப்பு
டோன்ட் வொரி - கவலைப்படாதே
விக்கிரகங்கள் - தெய்வச் சிலைகள்
மார்க்கம் - வழி
யாத்திரை - புனிதப் பயணம்
ஷர்ட் - மேலாடை
காஸ்ட்லி - விலை உயர்ந்தது
ஓல்ட் ஸ்டுடண்ட் - முன்னாள் மாணவன்
வாட் ஹாப்பண்ட - என்ன ஆயிற்று
லேட் - தாமதம்
டிராபிக் ஜாம் - போக்குவரத்து நெரிசல்
டிக்கட் - பயணச் சீட்டு
லாஸ்ட் வீக் - கடந்த வாரம்
ரிசர்வ் - முன்பதிவு
டிபன் - சிற்றுண்டி
யூனிபார்ம் - சீருடை
பேன் - மின் விசிறி
செல்போன் - அலைப்பேசி

**10.தமிழ் எண்களை அறிக.**

1-க 2-உ 3-ங 4-ச 5-ரு 6-சு 7-எ 8-அ 9 சு 10 க0

**கீழே கொடுக்கப்பட்ட எண்களுக்குத் தமிழ் எண்களை எழுது.**

4, 50, 64, 11, 77, 85, 90, 116, 24

**11.மொழியாக்கம்**

**I.தமிழாக்கம் செய்க.**

1. Trees are very useful to us.They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

மரங்கள் நமக்கு மிகவும் பயனளிக்கின்றன. அவை நமக்கு மரக்கட்டையையும்,விறகையும் தருகின்றன. நாற்காலிகள், மேசைகள் மற்றும் பலவகையான கலைப்பொருட்கள் செய்ய மரக்கட்டைகள் உதவுகின்றன. சில மரங்களின் வித்துக்களில் இருந்து எண்ணெய் கிடைக்கிறது. சில மரங்களின் இலைகள், கனிகள் ஆகியவை மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

2. Early to bed and earlly to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day"s work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult is made easy.

பின் தூங்கி, முன் எழுதல் எனும் பழக்கம் ஓருவனை உடல்நலமுடையவனாக, செல்வமுடையவனாக, அறிவு உடையவனாக ஆக்கும். தாமதமாய் எழுபவனை விட அதிகாலையில் எழுபவனுக்கு அன்றாட வேலைகளைக் கவனிக்க அதிக நேரமும், சக்தியும் கிடைக்கிறது. அவன் தன்னைப் புத்துணர்ச்சி உடையவனாகவும் சுறுசுறுப்பு உடையவனாகவும் உணர்கிறான். அதிகாலை நேரமே மிகவும் உகந்ததாக இருக்கிறது. சித்தம் தெளிவாக இருப்பதால், கடினமான பாடப்பகுதிகூட எளிதாக ஆகிவிடுகிறது.

3. The television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The television is also used for commercial advertisements.

தொலைக்காட்சி தற்கால இந்தியாவின் அற்புதங்களில் ஒன்றாகும். கல்வி, நலவாழ்வு, வேளாண்மை, குடும்பநலம் போன்ற பயன்தரும் பல நிகழ்ச்சிகள், நாட்டுப்புற மக்களுக்காகவே தனி கவனிப்புடன் தயாரிக்கப்படுகின்றன. ஆர்வமுடன் பார்க்கத்தக்க நாடகங்களும், திரைப்படங்களும் குறிப்பிட்ட இடைவெளிகளில் காண்பிக்கப்படுகின்றன. வணிக விளம்பரங்களுக்கும் தொலைக்காட்சி பயன்படுகிறது.

4. Food is essential for all living beings. Without food man cannot live long. Every man has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, everyman has to eat enough food to live.

எல்லா உயிரினங்களுக்கும் உணவு இன்றியமையாதது. உணவின்றி மனிதன் நெடுநாள் வாழ முடியாது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவு உணவை உண்ண வேண்டும். குறைந்த அளவு உணவு உடல்நலத்தைப்பாதிப்பதோடு, நோய்வாய்படவும் ஏதுவாகும். ஆகவே ஒவ்வொருவரும் உயிர்வாழத் தேவையான அளவு உணவு உண்ண வேண்டும்.

5. Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to uphold the value of truth. From his experiment with truth, he came to know that there could not be a God other than truth. He taught us that our thought, word and deed should on truth. He preached what he practised.

காந்தியடிகள் எல்லாவற்றையும் விட மேலாக வாய்மையை நேசித்தார், மதித்தார். வாய்மையின் மதிப்பை நிலைநாட்ட தன் வாழ்நாள் முழுதும் போராடினார். வாய்மையுடன்தான் நிகழ்த்திய ஆய்வுகளில் இருந்து, வாய்மையைத்தவிர வேறு தெய்வம் இல்லையென்று கண்டார். நமது எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் ஒன்றாகவே இருக்க வேணடும் என்று கற்பித்தார். தாம் சொல்வதையே செயலிலும் காட்டினார்.

6. Library is a place for reading books. There will be a librarian in each library. He takes care of all the books in English and Tamil. It also has books on Science, Economics and commerce. There are newspapers and magazines in tamil and English. We Can read them there silently . It is a place for silent reading. Books can be borrowed for two weeks from the library. It is useful for everyone.

நூலகம் புத்தகங்கள் படிப்பதற்கான இடமாகும். ஒவ்வொரு நூலகத்திலும் ஒரு நூலகர் இருப்பார். அவர், நூலகத்திலுள்ள அனைத்து புத்தகங்களையும் கவனமாகப் பார்த்துக் கொள்வார். ஆங்கிலம் மற்றும் தமிழ் கதைப்புத்தகங்கள் அங்கு இருக்கும். அறிவியல், பொருளியல், வணிகவியல் புத்தகங்களும்கூட அங்கு இருக்கும். ஆங்கிலம் மற்றும் தமிழில் புதிய இதழ்கள் அங்கு இருக்கும். அது அமைதியாகப் படிப்பதற்கென்றே உள்ள இடமாகும். நூலகத்திலிருந்து புத்தகங்களை இரண்டு வாரங்களுக்கு இரவலாகப் பெற்றுக்கொள்ளலாம். நூலகம் ஒவ்வொருவருக்கும் பயன்படக்கூடிய ஒன்றாகும்.

**12. இணையான தமிழ்ப்பழமொழிகளை எழுதுக**

1. Health is Wealth.
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2. Too much of anything is good for nothing
   அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்
3. No pain No gain
   ஊழைப்பின்றி ஊதியமில்லை
4. Haste makes Waste
   பதறிய காரியம் சிதறும்

5. Knowledge is Power
அறிவே ஆற்றல்
6. Charity begins at home
ஒப்புரவின் தொடக்கம் இல்லமாகும்.
7. Covet all lose all
பேராசை பேரிழப்பு
8. Diamonds cut diamonds
முள்ளை முள்ளால் எடு
9. East or West, Home is the best.
எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
10. Empty vessals make the greatest sound.
குறைகுடம் தளும்பும்.
11 .Money makes many things.
பணம் பத்தும் செய்யும்.
13. Old is gold.
பழமையே பசும்பொன்.
14. Prevention is better than cure.
வருமுன் காப்பது மேல்.
15. Little strokes fell great oaks5
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
16. Work is workship
செய்யும் தொழிலே தெய்வம்.
17.. Time is gold
காலம் பொன் போன்றது.
18. Man proposes god disposes
நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
19. Srtike the rod while it is hot.
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
20. The face is the Index of the mind
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
21. All that glitter is not gold
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
22. Art is long : but life is short.
கல்வி கரையில: கற்பவர் நாள்சில.
23. Barking dog seldom bite
குரைக்கின்ற நாய் கடிக்காது.
24. There is no smoke without fire
நெருப்பின்றி புகையாது.

25. A friend in need is a friend indeed
ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.
26. Self help is the best help
தன் கையே தனக்குதவி.
27 .Efforts never fail
முயற்சி திருவினையாக்கும்.
28. Live and let live
வாழு, வாழ விடு
29. All is well that ends well
நல்ல தொடக்கமே நல்ல முடிவு.
30. Look before you leap
ஆழம் தெரியாமல் காலை விடாதே.
31. Small rudders guide great ships
சிறு துரும்பும் பல்குத்த உதவும்.

## 26. கவிதை

**(பள்ளி, குழந்தை, நட்பு, அன்னை, முயற்சி, மழை, கடல், இயற்கை - இத்தலைப்புகளை கீழ்வரும் கவிதையோடு பொருத்தி எழுதவும்)**

**அன்பைத் தருவது**
**ஆற்றல் தருவது**
**இன்பம் தருவது**
**ஈர்ப்பு தருவது**
**உவகைத் தருவது**
**ஊக்கம் தருவது**
**எழுச்சித் தருவது**
**ஏற்றம் தருவது**

## 27. பா நயம் பாராட்டல்

1. மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப்போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில் யாண்டும்

✠ **திரண்ட கருத்து:**
மக்களிடையே அன்புநெறி, பரந்த மனப்பான்மை, தன்னலப் போக்கு, ஒற்றுமை உணர்வு, உயரந்த எண்ணங்கள் உருவாகி புனிதமுற்று மக்கள் வாழ புத்தக சாலை வேண்டும்.

✠ **பொருள் நயம்:**
உயர் எண்ணம் உருவாக நாடெங்கும் புத்தகசாலை வேண்டும்" என்கிறார் பாரதிதாசனார்.

✠ **சொல்நயம்:**
தனிமனித தத்துவமாம் இருளைப்போக்கி

✠ **மோனை:** முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
சான்று :**ம**னிதரெலாம் **இ**னிதினிதாய் **பு**னிதமுற்று
**ம**னோபாவம், **இ**லகுவது **பு**த்தகசாலை

✠ **எதுகை:** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை
சான்று : மனிதரெலாம்_தனிமனித_இனிதினிதாய்_புனிதமுற்று

✠ **இயைபு:** இறுதி எழுத்தோ,அசையோ, சீரோ ஒன்றுபட்டு வருவது இயைபு
சான்று : காண்பதற்கும் …… உணர்வதற்கும்

✠ **ஓசை நயம்:**
அகவலோசை

✠ **அணி:**
உவமை அணி.

✠ **தலைப்பு: புத்தக சாலை**

**2.** பிறநட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

- **பாரதியார்.**

**திரண்ட கருத்து:**

பிறநாட்டு அறிஞர்களின் நூல்கள் தமிழில் பெயர்த்தல் வேண்டும். அழியாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றுதல் வேண்டும். பழங்கதைகளைப் பேசிக்கொள்வதில் பெருமை இல்லை. நமது இலக்கியங்களை வெளிநாட்டவர் போற்றி வணங்குதல் வேண்டும்.

**எதுகைத்தொடை**

சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது.
பி**ற**நாட்டு இ**ற**வாத
ம**றை**வாக தி**ற**மான

**மோனைத் தொடை**

சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது.
**இ**றவாத **இ**யற்றல்
**ம**றைவாக **ம**கிமை

**இயைபு நயம்**

அடிதோறும் இறுதி அசையோ அல்லது எழுத்தோ ஒன்றி வருவது.
பெயர்த்தல் **வேண்டும**
இயற்றல் **வேண்டும்**
செய்தல் **வேண்டும**

**சொல் நயம்**

தமிழில் உருவாக்கப்பட வேண்டிய சாத்திரங்களை - இறவாத புகழுடைய நுல்கள்

**தலைப்பு:** தமிழ் வளர்ச்சி

3. அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கட் கெல்லாம்நான் அன்புசெய்தல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்திடல் வேண்டும்
தப்பேது நான்செய்யினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாதநிலைமையும் வேண்டுவனே

**திரண்ட கருத்து**

தந்தையே அருள்புரிதல் வேண்டும். உயிர்களுக்கு அன்பு செலுத்துதல் வேண்டும். உன் புகழைப்பாடுதல் வேண்டும். அருட்சோதி தோன்ற வேண்டும். தவறை மண்ணித்து பிரியாமல் இருக்க வேண்டும்.

**மோனை நயம்**

முதல் எழுத்து ஒன்றி வருவது
**அ**ப்பா - **ஆ**ருயிர
**எ**ப்பாரும் - **எ**ந்தை

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
அப்பா - எப்பாரும்
செப்பாத - தப்பேது

**இயைபு நயம்**

இறுதி எழுத்தோ அசையோ ஒன்றி வருவது.
**வேண்டும் - வேண்டும்.**

**ஓசை நயம்**

அகவலோசை

**தலைப்பு:** அன்பு நெறி

4. பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலையுடை கதருடையாய் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்.

**திரண்ட கருத்து**

பாலைவனங்கள் சோலைவனமாகி பசுங்கிளிகள் பாடவேண்டும். தொழிசாலைகள் பெருகவேண்டும். தமிழ் முழங்கவேண்டும். நாட்டுப்பற்று வளரவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டும்.

**மோனை நயம்**

முதல் எழுத்து ஒன்றி வருவது
**பா**லைவனம் - **ப**சுங்கிளிகள்
**சா**லைகளில் - **ச**பைகளிலே

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
பா**லை**வனம் - சா**லை**களில்
சீ**லை**யுடை - வே**லை**யில்லா

**இயைபு நயம்**

இறுதி எழுத்தோ அசையோ ஒன்றி வருவது.
**வேண்டும் - வேண்டும்.**

**ஓசை நயம்**

அகவலோசை

**தலைப்பு:** நாட்டு வளர்ச்சி

## 28. கட்டுரை

### 1.சிக்கனமும் சிறுசேமிப்பும்

**முன்னுரை:**

**'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'** என்றார் வள்ளுவர். அப்பொருளின் சிறப்பை உணர்ந்து சேமிப்பது அவசியம்.

**சிக்கனம்:**

**"சிக்கனம் தேவை இக்கணம"** தேவைக்கு மேல் செலவு செய்வது ஆடம்பரம். தேவைக்கு மட்டுமே செலவு செய்வது சிக்கனம்.

**சேமிப்பின் அவசியம்:**

**எறும்பு, தேனீக்கள** கூட தனது எதிர்கால தேவையை உணர்ந்து சேமிக்கின்றன. நமது வருவாயில் ஒரு சிறு தொகையையாவது சேமிக்க வேண்டும்.

**சேமிப்பில் கவனம்:**

நமது சேமிப்பைப் பாதுகாப்பாக அரசுடைமை வங்கிகள், அஞ்சலகங்களில் சேமிக்க வேண்டும்.

**முடிவுரை:**

நமது எதிர்கால, ஒளிமயமான வாழ்விற்குச் சேமிப்பு அவசியம். **சிறு துளி பெருவெள்ளம்** என்பது போல் சிறுக சிறுகச் சேமித்து வளம் பெருக வாழ்வோம்.

**"சிக்கனம் வீட்டைக் காக்கும் சேமிப்பு நாட்டைக் காக்கும்"**

## 2.சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**முன்னுரை:**

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கைச் சூழ்நிலையை மாசுபடாமல் பாதுகாப்பதே சுற்றுச் சூழல் பாதுகாப்பாகும்.

**நிலத்தூய்மை:**

இரசாயன உரம், பூச்சிக்கொல்லி, நெகிழி பயன்பாட்டால் நிலம் மாசடைகிறது. இயற்கை உரம் பயன்படுத்தி, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது நமக்கும், நிலத்திற்கும் பயனளிக்கும்.

**நீர்த்தூய்மை:**

"நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். கழிவு நீர், இரசாயனக் கழிவுநீர் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசடைகிறது. கழிவு நீரை மறுசுழற்சி செய்யவேண்டும்.

**காற்றுத்தூய்மை**

தொழிற்சாலை புகை, வாகனப்புகை போன்றவற்றால் வளி மண்டலம் மாசடைகிறது. இதனைத் தடுக்க அதிக அளவு மரங்களை வளர்க்க வேண்டும்.

**முடிவுரை:**

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டக்கூடாது. நாம் வாழும் இந்த பூமியை மாசுபடுத்தாமல் பாதுகாப்பது நமது கடமையாகும்.

**"சுற்றுச் சூழல் காப்போம்! நோயின்றி வாழ்வோம்!"**

## 3.மழைநீர் சேகரிப்பு

**முன்னுரை**

மழை பெய்யும் காலங்களில், மழை நீரை நிலத்துக்கு அடியில் சேமிப்பைதையே மழைநீர்சேகரிப்பு என்கிறோம்.

**பற்றாக்குறை ஏன்?**

மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப நீர்நிலைகள் பெருகவில்லை. கிடைத்த நீரையும் சரியான முறையில் பாதுகாப்பதில்லை. இதனால் கோடையில் கடும் வறட்சி நிலவுகிறது.

**மழைநீர் சேகரிப்பு**

தொட்டிகள் அமைத்தல், நீர் நிலைகளை ஆழப்படுத்துதல், புதிய அணைகளைக் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் மழை நீரைச் சேமிக்கலாம்.

**மழைநீர் சேகரிக்கும் முறைகள்**

ஆறு குளங்களில் சேமித்தல். ஆழ்குழாய்க் கிணறுகளில் சேமித்தல். வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்தல்.

**பயன்கள்**

நிலத்தடி நீர்மட்டம் உயரும், கடல் நீர் நிலப்பகுதியில் உட்புகாமல் தடுக்கும். விவசாயம் சிறப்பாக நடைபெறும். உணவு உற்பத்தி பெருகும். எதிர்கால சந்ததியினரின் தண்ணீர் தேவை பூர்த்தியாகும்.

**முடிவுரை**

மரங்களை வளர்ப்பதால் மழை வளம் பெருகும். இதனால் தண்ணீர் பற்றாக்குறை நீங்கும்.

**மழைநீரைச் சேகரிப்போம் ! வருங்காலத் தலைமுறையைக் காப்போம். !**

## 4. காலத்தை வெல்லும் கணினி

**முன்னுரை:**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு கணினி. இது இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுகிது.

**தோற்றம்:**

கி.பி.1883-ல் சார்லஸ் பாபேஜ் கட்டளைகளை வடிவமைத்தார். கணினியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

**வகைகள்:**

பல்லூடகக் கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி.

**இணையம்:**

உலகின் அனைத்துக் கணினிகளையும் இணைப்பது.

**கணினி வழிக் கல்வி:**

கணினியைப் பயன்படுத்தி கற்பிக்கும் முறை

**பயன்படும் இடங்கள்:**

வங்கிகள், உணவகங்கள், வணிகவளாகம், கல்வி, பேருந்து, புகைவண்டி நிலையங்கள்.

**உள்ளங்கையில் உலகம்:**

கணினியும், இணையதளமும் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொண்டு வந்துள்ளன.

**முடிவுரை:**

மனிதனின் கண்டுபிடிப்பை மனித சமுதாய வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்த உறுதி எடுப்போம்.

## 29. வாழ்வியல் திறன்கள்.

### இயல் 1 - தன்னை அறிதல்

1.யாழினியின் செயல் சரியானதுதானா? **தவறு**

2. நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிந்தனை செய்க.

   **நான் உறுதியாகக் கட்டுரைப் போட்டியில் கலந்துக் கொள்வேன். என் திறமை மீது என்க்கு நம்பிக்கை உள்ளது.**

3. இச்சூழலிலிருந்து நீங்கள் பெறும் பண்பு யாது?

   **தன்னை அறிதல்**

### இயல் 2 - மறுத்தல் திறன்

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா? - **சரி.**
2. நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்?
   **நல்ல ஒழுக்கம் உடையவரோடு.**
3. நீ உன் பெற்றோரிடம் எவ்வாறு நடந்து கொள்வாய்?
   **உண்மையாகவும் மரியாதையுடனும் நடந்து கொள்வேன்.**

### இயல் 3 - பிறர் நிலையில் தன்னை வைத்துப்பார்த்தல்

1. மாற்றுத் திறானாளியிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

   **நான் அன்பாக நடந்துகொள்வேன். வேண்டிய உதவிகள் செய்வேன்.**

2. இச்சூழலிலிருந்து நீங்கள் பெறும் பண்பு யாது?

   **பிறர் நிலையில் தன்னை வைத்துப்பார்த்தல்**

### இயல் 4 - முடிவெடுக்கும் திறன்

1. இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?
   **பெண்களின் திருமண வயது 21. ஆதலால் எனக்கு திருமணம் வேண்டாம் என்று கூறுவாள்**
2. உங்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?
   **திருமணத்திற்கு இது உரிய வயது அன்று என்று கூறி புரிய வைப்பேன்.**
3. இச்சூழலில் நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் திறன் என்ன?
   **முடிவெடுக்கும் திறன்.**

## இயல் 5 - மனவெழுச்சியை எதிர்கொள்ளும் திறன்

1. இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?
   **பெற்றோருடன் சேர்ந்து திரைப்படத்திற்கு செல்லலாம் என தன் மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்வான்.**
2. கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?
   **எனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி மறுத்துவிடுவேன்.**
3. இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன் யாது?
   **மனவெழுச்சிகளை எதிர்கொள்ளும் திறன்.**

## இயல் 6 - சிறப்பாகத் தொடர்பு கொள்ளும் திறன்

1. மதியழகன் மேற்கொண்டு எங்கு படிக்க விரும்பினான்?
   **திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பினான்.**
2. மதியழகன் தந்தை சினம் கொண்டது ஏன்?
   **திரப்படக் கல்லூரியில் சேரவிரும்பியதால் சினம் கொண்டார்.**
3. தந்தை சம்மதிக்காவிட்டால் மதியழகன் என்ன செய்வான்?
   **மூத்தோர் அல்லது ஆசிரியர்கள் மூலம் சம்மதிக்க வைப்பான்.**

## இயல் 7 - சிக்கலுக்குத் தீர்வு காணல்

1. பாண்டியன், தன் சிக்கலுக்கு எவ்வாறு தீர்வு காண்பான்?
   **தன் தந்தையின் நண்பரிடம், இதைப் பற்றி எடுத்துக் கூறச்சொல்லி தந்தை உணருமாறு செய்வான்.**
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
   **நீங்கள் செய்வது பிடிக்கவில்லை என்று நேரடியாக அவரிடம் கூறிவிடுவேன்.**

## இயல் 8 - மன அழுத்தங்களை எதிர்கொள்ளும் திறன்

1. இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம்?
   **இலக்கியாவின் ஆர்வமும் முயற்சியும்.**
2. இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள்?
   **திடீரென்று மயக்கமடைந்ததால் மருத்துவனையில் சேர்த்தார்கள்.**
3. அம்மாவிற்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன?
   **இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானலும். தன் தாயைப் பார்த்துக்கொண்டே தேர்வுக்குப் படிப்பாள்.**

## இயல் 9 - கூர்சிந்தனைத் திறன்

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?
   **'நாளை எனக்கு தேர்வு உள்ளது. நான் படிக்க வேண்டும். அப்பா வந்தவுடன் பேசிக்கொள்ளுங்கள்.' என்பாள்**
2. நீங்கள் பூங்கழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
   **அப்பா வந்தவுடன் செல்பேசியில் தொடர்பு கெண்டு பேசுங்கள் என்று கூறி அனுப்பி விடுவேன்.**
3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன் யாது?
   **கூர்சிந்தனைத் திறன்.**

## இயல் 10 - ஒருவரோடு ஒருவர் நட்பாகப்பழகும் திறன்

1. இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது? **தமிழரசன்**
2. தன்னிடம் அனைவரும் நெருங்கிப்பழகுவதற்கு எழிலன் என்ன செய்ய வேண்டுமென்று நீ நினைக்கிறாய்? -
   **அனைவரிடமும் தானாக சென்று பழக வேண்டும்.**
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா? எத்தனைப்பேர்?
   **உண்டு. அனைவரும்.**

## 30. அலுவலகக் கடிதம

அனுப்புதல்

ஊர்ப்பொதுமக்கள்,
பூஞ்சோலை கிராமம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெறுநர்

..........................................................................................................

................................................................................................................

கிருஷ்ணகிரி மாவட்டம்.

ஐயா,

பொருள் : ........................................................................... வசதி வேண்டி விண்ணப்பம்.

எங்கள் ஊரில் 500 குடியிருப்புகள் உள்ளன. எங்கள் ஊருக்குத் தேவையான ........................ ............................................. வசதி செய்து தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இடம்: இப்படிக்கு,
நாள் : ஊர்ப்பொதுமக்கள்

உறைமேல் முகவரி

பெறுநர்

.............................................................................................................................

.............................................................................................................................

கிருஷ்ணகிரி மாவட்டம்.

## 22.துணைப்பாடம்.

### 1. பரிதிமாற்கலைஞர்

* இயற்பெயர் - சூரிய நாராயண சாஸ்திரி.
* தமிழார்வம் கொண்ட இயற்றமிழ் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தார்.
* மணிப்பிரவாள நடையை எதிர்த்தார்.
* ரூபாவதி, கலாவதி என்னும் நாடகங்களை எழுதினார்.
* முதன் முதலில் தமிழை உயர்தனிச்செம்மொழி என்று அழைத்தார்.

### 2. மெல்ல மெல்ல மற

* கமலநாதன் புகைப் பிடிக்கும் பழக்கம் உடையவன்.
* அவனது மனைவி கோகிலா புகைப் பழக்கத்தை விட்டுவிடும்படி கூறுகிறாள்.
* கோகிலாவின் அறிவுரைகளை அவன் கேட்கவில்லை.
* நண்பன் இராமலிங்கம் புகைப் பழக்கத்தினால் புற்று நோய் வந்து இறந்து விடுகிறான்.
* நண்பனின் முடிவை எண்ணி கமலநாதன் மனம் திருந்துகிறான்.

### 3. அன்றாட வாழ்வில் சட்டங்கள்

**குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டம்**

* பெற்றோர் தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல் கூடாது.
* படிக்கும் வயதில் படிக்க வைக்க வேண்டும்.

**போக்குவரத்துச் சட்டம்.**

* சிவப்பு விளக்கு எரிந்தால் வண்டியை நிறுத்த வேண்டும்.
* மஞ்சள் விளக்கு எரிந்தால் தயாராக இருக்க வேண்டும்.
* பச்சை விளக்கு எரிந்தால் புறப்படுதல் வேண்டும்.
* சாலை விதிகளை மீறுதல் குற்றமாகும்.

### 4. எம்.ஜி.ஆர்.

* 14.01.1917 ல் கண்டியில் பிறந்தார்.
* சிறு வயதில் மேடை நாடகங்களில் நடித்தார்.
* திரைப்பட கதாநாயகனாக உயர்ந்தார்.
* நடிப்பும் அரசியலும் இரவது இரு கண்கள்.
* மக்கள் திலகம் என்று அழைக்கப்பட்டார்.
* அண்ணாவின் இதயக்கனி ஆனார்.

* தமிழகத்தின் முதலமைச்சராக பணியாற்றினார்.
* சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்தார்.
* பாரத ரத்னா விருது பெற்றார்.
* **24.12.1987 அன்று மறைந்தார்.**

## 5. குறட்டை ஒலி

* தென்பகுதி குடும்பம் அன்பான ஏழைக் குடும்பம். எப்பொழுதும் ஆரவாரம் இருக்கும்.
* வடபகுதி குடும்பம் அரக்க குணம் படைத்த இருவர் மட்டுமே வாழும் குடும்பம்.
* ஏழைத் தாய்க்கு ஏழு குழந்தைகள்.
* வசதி படைத்த குடும்பத்தில் குழந்தைகள் இல்லை.
* ஏழை குடும்ப நாய் ஐந்து குட்டிகளை ஈன்றெடுக்கிறது.
* தாய் நாய் காணாமல் போக, குட்டிகள் பசியால் கத்தின.
* பணக்கார வீட்டார் குறட்டை ஒலியுடன் உறங்கினர்.
* ஏழைத் தாய் பஞ்சில் தனது தாய் பாலை நனைத்து நாய்க்குட்டிகளின் பசியைப் போக்கினாள்.

## 6. நூலக வளர்ச்சி

* ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது போல நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்.
* நூலகம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்.
* சிந்தனையைத் தூண்டும், அறிவை வளர்க்கும்.
* எல்லா ஊர்களிலும் நூலகம் செயல்பட்டு வருகிறது.
* நூலகத்தில் செய்தித்தாள், வார மாத இதழ்கள் இருக்கின்றன.
* பள்ளிகளில் புத்தகப் பூங்கொத்த திட்டம் செயல்படுகிறது.

## 31. படிவங்கள்.

சேமிப்பு கணக்கு எண்: ______________________

இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்

சேமிப்புக் கணக்கு

நாள்______________

______________________ வங்கி ______________________எனக்கு அல்லது

இதனைக் கொண்டு வருபவருக்கு ரூபாய் வழங்குக.

| ரூ. |
|---|

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

### வங்கியில் பணம் செலுத்தும் படிவம்

செலுத்தும் கிளை தேதி __________

கணக்கின் வகை __________

கணக்கு எண் __________

கணக்கு வைத்திருப்பவர் பெயர் _______

______________________

ரூபாய் (எழுத்தால்) __________

செலுத்தும் தெகை

| ரூ | பை |
|---|---|
| | |

காசாளர் மேலாளர்

செலுத்தும் கிளை தேதி __________

கணக்கின் வகை __________

கணக்கு எண் __________

கணக்கு வைத்திருப்பவர் பெயர் __________

ரூபாய் (எழுத்தால்) ______________________

அலுவலக முத்திரை

செலத்தும் தொகை

| ரூ | பை |
|---|---|
| | |

காசாளர் மேலாளர்

செலுத்துபவர் கையொப்பம்

பெயர்: __________

முகவரி: __________

தொலைபேசி எண் ___

வருமான கணக்கு எண்: _

பண விவரம்

| | | |
|---|---|---|
| 1000 X | | |
| 500 X | | |
| 100 X | | |
| 50 X | | |
| 20 X | | |
| 10 X | | |
| 5 X | | |
| நாணயம் | | |
| மொத்தம் | | |

## 20. தொடர்வண்டி இருக்கை முன்பதிவு படிவம் நிரப்புதல்

வண்டியின் பெயர்/எண் ________________ பயணதேதி ________________
வகுப்பு ________________ படுக்கை / உட்காரும் எண்ணிக்கை ________________
புறப்படும் இடம் ________________ சேரும்இடம் ________________
ஏறும் இடம் ________________

| வ.எண் | பெயர் | பால்ஆண் / பெண் | வயது | பயண சலுகை உரிமை எண் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் விவரம் (பயணச்சீட்டு வழங்கப்பட்ட மாட்டாது)

| வ.எண் | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

கையொப்பம்

**தொடர்பயணம் / திரும்பும் பயண விவரங்கள்**

வண்டி எண் பெயர் ................................ பயண தேதி................................
வகுப்பு................................ புறப்படும் இடம்................................சேரும் இடம்................................
விண்ணப்பதாரர் பெயர்................................
விலாசம்................................
................................
தொலைபேசி எண்................................ ................................

கையொப்பம்

பதிவு எண்

www.tnschools.co.in

March 2015

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** - (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

**1.** திருக்குறள் ________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

(அ) சிந்தியல் (ஆ) குறள் (இ) நேரிசை

**2.** குடும்பவிளக்கு ________ படைப்புகளுள் ஒன்று.

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) சுரதா

**3.** 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் ________ .

(அ) அகநானூறு (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை

4. உலகம் என்னும் தமிழ்ச்சொல் _________ என்னும் சொல்லின் அடியாகப்பிறந்தது.
(அ) உலகு (ஆ) உலவு (இ) உளது

5. காந்தியடிகள் _________ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
(அ) சிரவணபிதுர்பத்தி (ஆ) அரிச்சந்திரன் (இ) பக்தப் பிரகலாதன்

6. "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் _________ .
(அ) கந்தபுராணம் (ஆ) சீறாப்புராணம் (இ) பெரியபுராணம்

## பகுதி - 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக :** **6x1=6**

7. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் _________ .

8. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் _________ என வழங்கப்படுகிறது.

9. நிற்க நேரமில்லை என்ற நூலின் ஆசிரியர் _________ .

10. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் _________ பேராசிரியராகப் பணியாற்றினார்.

11. படப்பிடிப்புக் கருவியை _________ பொருத்துவதும் உண்டு.

12. தனக்குவமையில்லா ஒரு _________ தமிழ் இனம்.

## பகுதி - 3

**III. பொருத்துக :** **4x1=4**

13. நாவாய் - சிவன்

14. அங்கணர் - மாலை

15. எண்கு - படகு

16. தார் - கரடி

பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்க :** **4x1=4**

17. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.

18. செய்திப்படங்கள் வாயிலாய் நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

19. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்.

20. சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

21. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?

22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

23. கையுறைப் பொருள்களாய்க் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்கு கொண்டு சென்றான்?

24. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப்பெயர் வைத்தார்?

25. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை?

26. கெடுப்பார் இலானும் கெடுபவர் யார்?

27. அறிவு எனப்படுவது யாது?

### பகுதி - 2

**VI.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

**28.** மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?

**29.** கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?

**30.** பண்டைத் தமிழர்களின் ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

**31.** கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?

**32.** காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?

**33.** இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?

**34.** பட்டப் படிப்புகள் எவையேனும் நான்கினை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

**VII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **3x4=12**

**35.** தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?

**36.** விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?

**37.** தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழி தொகுத்து எழுதுக.

**38.** புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?

**39.** இளந்திரையன் ‘சாதனைப்பூக்கள்’ என்று எவற்றைச் சுட்டுகிறார்?

## பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **3x4=12**

40. பெண்ணுரிமையை விளக்குக.

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

42. மேடைப்பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

43. பண்டைத் தமிழரின் கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

45. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

(i) இப்பாடல் குறிப்பிடும் புலவர்களின் பெயர்களை எழுதுக.

(ii) செவியறுத்து - பிரித்து எழுதுக.

(iii) சீத்தையர் - பொருள் எழுதுக.

(iv) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

(v) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

**46.** கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப்பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள் வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் 'சாவக' நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத்தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருட்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

**வினாக்கள் :-**

(i) கடல் வாணிகத்தில் சிறந்திருந்தவர் யார்?

(ii) கடல் கடந்து வாணிகம் செய்த பொருள்கள் யாவை?

(iii) கிறித்து பிறப்பதற்கு முன் எந்தெந்த நாடுகளுடன் தமிழர்கள் வாணிகம் செய்தனர்?

(iv) அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள்கள் யாவை?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பினை எழுதுக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

**X.** கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்க. **2x8=16**

**47.** (அ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

48. (அ) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

**பகுதி - 2**

49. செய்யுள் வடிவில் விடை தருக. **2+2+6=10**

(அ) நன்றிக்கு - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) வினை - என முடியும் குறள்.

(இ) வாயிற் கடைமணி - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

-o0o-

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை:**
(i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:**
(i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.
(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
(iii) வினா எண் 38 -க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க**

**பகுதி - 1**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. 'கடலை' - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் __________.

(அ) ஔகாரக்குறுக்கம் (ஆ) ஐகாரக் குறுக்கம்

(இ) மகரக் குறுக்கம் (ஈ) ஆய்தக் குறுக்கம்

2. இரட்டித்து நின்று இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும் சொல் __________.

(அ) குறிப்புப் பெயரெச்சம் (ஆ) பண்புப் பெயர்

(இ) அடுக்குத் தொடர் (ஈ) இரட்டைக் கிளவி

3. "ஆடுவாயா?" என்று வினவிய போது "பாடுவேன்" என்று விடை கூறுவது ________ .
(அ) எதிர்மறை விடை (ஆ) இனமொழி விடை
(இ) வினா எதிர் வினாதல் விடை (ஈ) உறுவது கூறல் விடை

4. நிரைகவர்தல் என்பது ________ .
(அ) வெட்சி (ஆ) நொச்சி (இ) கரந்தை (ஈ) வாகை

5. ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது ________ .
(அ) இன்னிசை வெண்பா (ஆ) இன்னிசைச் சிந்தியல் வெண்பா
(இ) பஃறொடை வெண்பா (ஈ) இணைக்குறள் ஆசிரியப்பா

பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5x1=5

6. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ________ .

7. 'வேய்புரை தோள்' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ________ .

8. வருணன் ________ நிலத்திற்குரிய தெய்வம்.

9. மேற்கு + நாடு என்பது ________ எனப் புணரும்.

10. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ________ .

பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க.** 10x1=10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. குழலி திருக்குறள் கற்றாள். (பிறவினைத் தொடராக மாற்று)

13. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
அவன் கவிஞன் அன்று

14. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
நான் மழையில் நனைவது பிடிக்கும்.

**15.** கீழ்க்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்க.
மலரும் மணமும் போல

**16.** கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
இராமன் நாளை வருகிறேன் என்றான்

**17.** பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலரசி

**18.** கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
திரைபடம் எடுக்க பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

**19.** மரபுப் பிழை நீக்கி எழுதுக.
நரி கத்த யானையும் கத்தியது.

**20.** தொகைச் சொல்லை விரித்தெழுதுக. – நாற்படை

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு விடையளிக்க.** 5x2=10

**21.** பொதுமொழி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

**22.** இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக் காட்டுடன் விளக்குக.

**23.** வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**24.** கருங்குழி - புணர்ச்சி விதி கூறுக.

**25.** முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

**26.** வாகைத்திணை என்பது யாது?

**27.** பகுபத உறுப்பிலக்கணம் தருக : கேட்ட

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி 3 இல் வினா எண் 35 இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்க.** 2x5=10

28. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

29. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க் காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு".

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

32. 'மெல்ல மெல்ல மற' என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

33. தமிழகத்தில் நூலகத்துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

### பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

மம்மி, வர்ற சாட்டர்டே எனக்கு பர்த்டே. நீங்க இன்னும் எனக்கு டிரஸ் எடுக்கவில்லையே, ஏன்? நம்ம ரிலேட்டிவ்ஸ் எல்லாரையும் இன்வைட் பண்ணலாமா?

(ஆ) தொடர்களில் உள்ள கோடிட்ட இடத்தை உரிய தமிழெண்களால் நிரப்புக.

(அ) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை ____________ (45).

(ஆ) உன் இல்லத்தின் எண் ____________ (67).

(இ) ஒட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது ____________ .

(ஈ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் __________.

**35.** கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. **3+2=5**

(அ) Food is essential for all living beings. Without food, man cannot live long. Everyone has to eat a certain quantity of food. If he eats less than that quantity, his health will spoil and he will fall ill. So, everyone has to eat enough food to live.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Birds of the same feather flock togehter.

(2) All that glitters is not gold.

(3) Do well what you have to do

(4) Health is Wealth

**35.** **குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.** **5x1=5**

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்தவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள் தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், ஹெலன்கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத் திறனாளியரே.

தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். வெற்றியும் கண்டார்கள். நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சலினால் இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ரூடால்ப் என்னும் பெண்மணி தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் கைவிடாமல் இடைவிடாத பயிற்சி கொண்டார். தனது பதின்முன்றாவது வயதில் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார். 1960 -ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற்ற வில்மா, ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப் பெற்றார்.

நம்பிக்கை தான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம்.

(1) சாதனை செய்பவர்கள் யார்?

(2) நம்பிக்கை யாரிடம் அதிகமாக உள்ளது?

(3) சாதனை செய்த மாற்றுத்திறனாளிகளின் பெயர்கள் நான்கினைக் கூறுக.

(4) வில்மா கலந்து கொண்ட ஒலிம்பிக்போட்டி எந்த ஆண்டு நடைபெற்றது?

(5) வாழ்வின் உயிர் நாடி எது?

## பகுதி - 4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்க.** **1x5=5**

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கி இருந்தது, பறவைகள் ஒலி எழுப்பியவாறே தங்கள் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலை வேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது அப்போது....

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

கடல் *அல்லது* முயற்சி

## பகுதி - 5

**37.** கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்து எழுதுக. **1x5=5**

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்த சிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவ நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே

-இராமலிங்க அடிகள்

## பகுதி - 6

**38.** மாலா என்பவர் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.10,000/- எடுப்பதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை மாலாவாக பாவித்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. **3+2=5**

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் எல்லாரும் "அவளுக்குகென்ன கவலை? அவள் அம்மா ஓர் ஆசிரியர். அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்து விடுவார். எனவே அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை" என்று கூறுவர் அதனைக் கேட்கும்போது இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் பெருமையாக இருக்கும்.

பள்ளியில் ஆண்டுத் தேர்வுக்குப் படிப்பதற்காக ஒரு வாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம் போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்து விட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார்.

அம்மாவுக்கு ஏற்பட்ட நிலையைக் கேட்டு இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

(1) இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம்?

(2) இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள்?

(3) அம்மாவுக்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள், ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள் அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள், திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

(1) இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?

(2) கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடைளிக்க.** 1x10=10

(அ) நும் ஊரில் சாலை வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) உன் பள்ளி இலக்கிய மன்ற விழாவிற்கு வருகை தந்துள்ள புலவர் தமிழன்பன் அவர்களை வரவேற்று ஒரு வரவேற்பு மடல் எழுதுக.

### பகுதி - 2

**41. கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** 1x10=10

(அ) நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை - நீர்ப்பற்றாக்குறை - ஏற்படக் காரணம். நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமித்தல் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழைபெறுவோம்.

**அல்லது**

(ஆ) பெண்கல்வி - பெண்ணுரிமை - சமுதாயத்தில் பெண்கள் நிலை - பெண்களுக்குச் சொத்துரிமை - பெண்விடுதலை - மணக் கொடை - பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.

-o0o-